மலர்-5 இதழ்-110 மார்ச் 16-31 2021 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

மாதமிருமுறை

ஆன்மிகமலர் mobile app

GET IT ON Google Play

www.aanmeegamalar.com

e- magazine

e- magazine



# சிவயோகிகளின் தலைவன் கருவூரார்

# கண் திருஷ்டி போக்கும் கண்ணாடி




வீடுகளில் திருஷ்டியைப் போக்க கண்ணாடியை வரவேற்பறையில் வைக்கும் பழக்கம் உள்ளது. ஆனால் இப்படி வரவேற்பறையில் கண்ணாடி வைக்கும்போது, உள்ளே வருபவர்களின் முகம் நேரடி யாக தெரியும்படி வைக்க கூடாது.

சிலர் திருஷ்டிக்காக வைக்கப்படும் கண்ணாடி யை வரவேற்பறை யில் வைக்கிறார்கள். திருஷ் டியை போக்க வைக்கப்படும் கண் ணாடியானது கட்டாயம் வரவேற்பு அறையில் வைக்கக் கூடாது.

வீட்டின் வெளிப்புறத்தில் அமைக்க வேண்டும். பிரதான வாசல் அல்லது மெயின் கேட்டிற்கு வெளியில் இருந்து செல்பவர்கள், உள்ளே வரும் பொழுது அவர்களுடைய முகம் அதில் தெரிய வேண்டும். அப்படியான அமைப்பை கொண்ட கண்ணாடி தான் உண்மையில் திருஷ்டியை போக்கும். வீட்டின் நிலைவாசலை தாண்டி உள்ளே வரும்பொழுது முகம் தெரியும்படியான கண்ணா டியை வைத்து இருக்க கூடாது.

# ஏமாற்றுதல் கொடுக்கும் பாவம்

ஒரு நல்லவனை, ஒரு தீயவன் ஏமாற்றுகிறான் என்றால், நல்லவனின் பாபத்தை எடுத்துக் கொண்டு, தீயது செய்கின்றவன் தன்னிடம் இருக்கின்ற சிறிதளவு புண்ணியத்தை அந்த நல்லவனிடம் ஒப்படைகின்றான் என்று பொருள்.

இந்த கருத்தை மனதில் வைத்துக்கொண்டு உலகில் அனைத்தையும் பார்க்கப் பழகிவிட்டால், அனைத்தும் மிக எளிதாக, மிக நீதியாக தோன்றும்.

# வாஸ்து பிரச்சனையை தீர்க்கும் செடிகள்

வாஸ்து பிரச்சனை தற்போது மக்களை மிக பெரிதாக வாட்டி வதைக்கும் ஒரு மிகப் பெரிய பிரச்சனையாக இருக்கிறது. இந்த பிரச்சனைக்கு பல லட்சங்கள் செலவு செய்து நிவர்த்தி செய்ய வழியில்லாமல் தவிப்போருக்கு ஒரு எளிமையான வழிவகை உள்ளது.

கட்டிய வீட்டை இடிக்கவும் வேண்டாம், மாற்றி அமைக்கவும் வேண்டாம் அதற்கு பதில் வீட்டில் நான்கு மூலைகளிலும், வெளிப்பக்கத்தில் கீழ்கண்ட செடிகளை வளர்த்தால் போதும்.




வீட்டின் வடகிழக்கு மூலையில், வில்வம் அல்லது துளசி செடியை வளர்க்க வேண்டும்.

தென் கிழக்கு மூலையில் ருத்திராட்சம் அல்லது பப்பாளி செடியை வளர்க்க வேண்டும்.

தென் மேற்கு மூலையில் மஞ்சள் செடியை வளர்க்க வேண்டும்.

வட மேற்கு மூலையில், சஞ்சீவி மூலிகை அல்லது, நெய் தக்காளி செடியை வளர்க்க வேண்டும்

மேற்கண்ட விருட்சங்களை, வீட்டின் நான்கு மூலையிலும் மேற் சொன்னவாறு, தரையில் நட்டோ அல்லது தொட்டியிலோ வளர்த்தால், வீட்டில் எந்தவிதமான வாஸ்து குறைபாடுகள் இருந்தாலும், அவை எளிதாக நிறைவேறும்.

www.aanmeegamalar.com

# பெருமாளின் குல தெய்வம்

பெருமாளை குலதெய்வமாக கொண்டு நாம் வழிபடுகிறோம், ஆனால் பெருமாளுக்கே குலதெய்வ வழிபாடு உள்ளது என்பது வியப்பிலும் வியப்பான உண்மையாகும்.

திருப்பதி வேங்கடவனுக்கு குலதெய்வமாக திகழ்பவர் ஸ்ரீ நரசிம்ம பெருமாள் ஆவார்.

திருமலை வாசனின் திருமண பத்திரிக்கையில் குலதெய்வம் என்ற இடத்தில் 'ஸ்ரீ நரசிம்மர்' புகைப்படம் போடப்படுகிறது.

ஸ்ரீனிவாசருக்கும், லக்ஷ்மி தேவிக்கும் திருமணம் முடிந்த பிறகு அஹோபிலத்தில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ நரசிம்மரை வணங்கி வழிபட்டனர் என வேங்கடேச மகாத்மியம் என்ற நூலில் குறிப்பிடப்படுகிறது.

அதன் காரணமாகதான் திருப்பதிக்கு நெய்வேத்தியம் செய்வதற்கு முன்னர், அவரின் குல தெய்வமான நரசிம்மருக்கு நைவேத்தியம் படைக்கப்படுகிறது. வேங்கடேச மஹாத்மியம் என்ற நூலில், இத்தகவல் உள்ளது.

ஸ்ரீ நரசிம்ஹாய நமஹ!
சத்யம் விதாதும் நிஜப்ருத்ய பாஷிதம்
வ்யாப்தம்ச பூதேஷு அகிலேஷு சாத்மன:
அத்ருஷ்யதாத் அதியத்புத ரூபமுத்வஹன்
ஸ்தம்பே சபாயாம் ந ம்ருகம் ந மானுஷம்ஞ்!

ஸ்ரீமத் பாகவத்தில் நரசிம்ம அவதாரத்தில் சொல்லப்பட்ட மிகமிக முக்கியமான ஸ்லோகமாக குறிப்பிடப்பட்டுள்ளது.




# விபூதியின் மகத்துவம்




விபூதியை அணிந்தவர் எந்த இடத்தில் உணவு அருந்துகிறாரோ அந்த இடத்தில் பார்வதி சமேதராகிய பரமசிவனும் உண்கின்றனர். உடம்பு முழுவதும் திருநீற்றை அணிந்தவரை எவர் பின்செல்கின்றனரோ அவர்கள் மகாபாதகராயினும் பரிசுத்தராகின்றனர் எனச் "சூரசங்கிதை" கூறுகின்றது.

காலை, உச்சி, மாலையென்னு முக்காலங்களிலும் விபூதி தரிக்கின்ற மெய்யன்பர் எக்குலத்தவராயினும் அவரைச் சிவபெருமான் என்றே பாவிக்கக்கடவர் என "மானவ சங்கிதை"யிற் சொல்லப்பட்டிருக்கின்றது.

மெய்யன்புடன் விபூதி தரிப்பவரைச் சிவபெருமான் நீங்காது நிற்பர். அதனால் சர்ப்பம், சூரியன் முதலிய கிரகங்கள், நட்சத்திரங்கள், திசைத் தெய்வம், யமன், காலன், யமதூதர், அக்கினி, கொடுநோய்கள், அவுணர், இடி, பூதங்கள், சிங்கம், புலி, கரடி முதலிய கொடியனவற்றால் வரும் துன்பங்கள் அவரை அணுகாதாம்.

அவர் இருவினைகளையும் வென்று சிவஞானம் பெற்று முத்தியடைவார் என்பது சத்தியம்.

பகைபிணி மண்ணைபன் மந்தி ரத்தினாமிகையறன்
கடையுள வெருட்சி பித்திடர்வகையெனைத் தையுமற
மாற்றி
யாவர்க்குந்தகைநல மளிப்பது தவள நீறரோ.

– தணிகைப் புராணம்



# வேண்டுதல் நிறைவேற்றும் பூஜையறை கண்ணாடி

www.aanmeegamalar.com

பூஜை அறையில் கண்ணாடியை கட்டாயம் வைக்க வேண்டும் என்பது சாஸ்திர விதியாகும். இதை பண்டைய காலம் முதல் இன்று வரை தொன்று தொட்டு நம் முன்னோர்கள் செய்து வருகின்றனர். பூஜை அறையில் கண்ணாடியை வைப்பது அதிர்ஷ்டத்தைக் கொண்டு வந்து சேர்க்கும். குலதெய்வம், பித்ருக்கள் போன்ற நம்முடன் இருக்கும் மறைமுக தெய்வங்கள் கண்ணாடியில் பிரதிபலிப்பதாக சாஸ்திரங்களில் குறிப்புகள் உள்ளன

பூஜை அறையில் தண்ணீர் வைப்பதும், கண்ணாடி வைப்பதும் இதற்காக தான். தண்ணீரிலும், கண்ணாடியிலும் இவர்கள் பிரதிபலிப்பதாகவும், வந்து செல்வதாகவும் கூறப்படுகிறது.

குல தெய்வம் தெரியாதவர்கள் கண்ணாடிக்கு சந்தன பொட்டு வைத்து பூஜை செய்தாலே போதும்! உங்களுடைய குல தெய்வம் அதில் முகத்தை காண்பிக்குமாம். இதனால் வேண்டிய வேண்டுதல்கள் அனைத்தும் நிறைவேறும்.

உடைந்த கண்ணாடி ஒரு போதும் வீட்டில் இருக்க கூடாது. இது கெடு பலன்களை கொடுத்துவிடும்.

குளியல் அறையில் முகம் மட்டும் தெரியும் படியான கண்ணாடி அமைக்கலாம். படுக்கையறையில் இடம் பெற்றிருக்கும் கண்ணாடி ஆளுயர கண்ணாடியாக இருக்கலாம் அல்லது முட்டி வரை தெரியும் கண்ணாடியாக இருக்கலாம். முகம் பார்க்கும் முகம் மட்டுமே தெரியும் கண்ணாடியாகவும் இருக்கலாம்.

இவற்றை தவிர்த்து வெவ்வேறு வடிவங்களில் வரும் இடுப்பு உயர கண்ணாடி, மார்பு வரை தெரியும் படியான கண்ணாடிகளை மாட்டி வைப்பது துரதிர்ஷ்டத்தை கொண்டு வந்து சேர்க்கும்.

படுக்கை அறையில் இருக்கும் கண்ணாடி கட்டாயம் இரவு படுக்கும் பொழுது திரை போட்டு மூடி வைத்திருக்க வேண்டும். கணவன் மனைவி தூங்கக் கூடிய இடத்தில் கண்ணாடியை திரை போட்டு இல்லாமலிருந்தால் நிச்சயம் அந்த வீட்டில் கணவன் மனைவிக்குள் புரிதல் என்பது இருக்காதாம். கருத்து வேறுபாடுகள் அதிகரித்து காணப்படுமாம். எனவே படுக்கை அறையில் இருக்கும் கண்ணாடியை மட்டும் எப்பொழுதும் திரை போட்டு மூடி வைத்து இருப்பது அவசியமாகும்.

# கவலை பயம் போக்கும் ஷேத்திர பாலகர்




சாகாவரம் பெற்ற தானகாசுரன் தேவர்களைத் துன்புறுத்தினான். அசுரனை அழித்து தேவர்களைக் காக்கும் பொறுப்பை சிவபெருமான் காளியிடம் ஒப்படைத்தார். அகோர வடிவம் எடுத்த காளி அசுரனுடன் போர் புரிந்து அவனைக் கொன்றாள். ஆனாலும் அவளின் ஆவேசம் அடங்கவில்லை. அவளது ஆவேசம் கண்டு உயிர்கள் அனைத்தும் அஞ்சின

தேவர்களும் முனிவர்களும் ஒன்று கூடி சிவ பெருமானைச் சரண் அடைந்தனர். சிவபெருமான் கட்டளைப் படி. மாய பாலகன் ஒருவன் காளியின் முன் பசியால் அழத்தொடங்கினான். அதைக் கண்ணுற்ற காளிதேவிக்கு தாய்மை பாசம் பீரிட்டது. அந்தக் குழந்தையை தூக்கிய காளி தாய்மை

உணர்வுடன் பாலூட்டினாள். பாலுடன் காளியின் கோபத்தையும் ஆவேசத்தையும் சேர்த்துக் குடித்தது அக் குழந்தை. அதன்பின் காளிதேவி ஆவேசம் குறைந்து சாந்தமானாள். அக்குழந்தையே வளர்ந்து "ஷேத்திர பாலகர்" எனப் பெயர் பெற்றது.

இவரைத்தான் பைரவர் என்ற திருநாமத்தில் அழைக்கின்றனர். இவர் கோவில்களை காப்பதுடன் பில்லி, சூன்யம், தோஷம் போன்ற வற்றையும் போக்கு வல்லமை படைத்தவர். பொதுவாக இந்த ஷேத்திர பாலகரை மாலை 6 மணிக்கு மேல் வணங்குவதே சிறப்பு, மாலையில் இருந்து அடுத்த நாள் காலை கோவில் திறப்பது வரை அந்த கோவில்களை பாதுகாக்கும் பொறுப்பில் இருப்பதால், இரவு முழுவதும் கண் விழிப்பதால் பகலில் அவர் ஓய்வெடுப்பதாக ஐதீகம், எனவேதான் பெரும்பாலான சிவன் கோவில்களில் மாலை வேளையில் மட்டும் பைரவருக்கு சிறப்பு பூஜைகள் நடைபெறும்.

தற்காலத்தில் இரவு காவலாளிகள் உள்ளது போன்று, அக்காலத்திலேயே கோவில்களை இரவில் காவல் காக்கும் தெய்வமாக பைரவர் திகழ்ந்துள்ளார்.

காவல்துறை, ராணுவம் போன்ற நாட்டை காவல் காக்கும் பொறுப்பில் உள்ளவர்களுக்கு முன்னோடியாக விளங்குபவர் இந்த ஷேத்ர பாலகர் என அழைக்கப்படும் பைரவர்தான், மேற் கண்ட தொழில் புரிபவர்கள் இந்த ஷேத்திர பாலகரை நினைத்து பணியை ஆரம்பித்தால் பணியில் எந்த தொய்வும் ஏற்படாது. பைரவர் என்ற திருநாமத்துடன், ஷேத்திரபாலகர் என்ற திருநாமத்தில், மயிலாடுதுறையில் இருந்து 8 கிலோ மீட்டர் தொலைவில் ஷேத்திர பாலபுரம் என்ற தலத்தில் தனியாக கோவில் உள்ளது.

பயம் மற்றும் பாதுகாப்பு இல்லை என்று நினைப்பவர்கள் இத்தலத்து இறைவனை வழிபட்டால் பலன் நிச்சயம் கிடைக்கும்.

# Sena Jal

## சேனா ஜல் (இராணுவ நீர்)




பயணிக்கும் போது அல்லது ஷாப்பிங் செய்யும் போது Sena Jal சேனா ஜல் (இராணுவ நீர்)

**கேட்டு வாங்குங்கள்.**

இந்தியாவை காக்கும் இராணுவ வீரர்களின் நலனுக்கான தனிப்பட்ட தயாரிப்பு

**அரை லிட்டர் ரூ.6**

**1 லிட்டர் ரூ.10**

"சேனா ஜல்" இலாபம் இராணுவ நலன்புரி சங்கத்துக்கு செல்கிறது. இந்த பணத்தை இந்திய இராணுவத்தில் உள்ள உயிர் தியாகம் செய்த சிப்பாய்களின் குடும்பங்களுக்கும், தியாகிகளின் குழந்தைகளின் கல்விக்காகவும் பயன்படுத்தப்படுகிறது.

ஆன்மிகம் மற்றும் நாட்டுப்பணியில் ஆன்மிகமலர் .காம்







## குழந்தை பாக்கியத்திற்கு பாகற்காய் குழம்பை பிரசாதமாக வழங்கும் கோவில்

## நந்திக்கு பால் அபிஷேகம் செய்தால் நீலநிறமாக மாறும் அற்புதக் கோவில்

## சந்திர தோஷம், சனி தோஷ பாதிப்பை தீர்க்கும்

# காகபுஜண்டர் வழிபட்ட சுவர்ணபுரீஸ்வரர் சிவாலயம்

பதினாறு செல்வங்களும் பெற்று பெருவாழ்வு வாழ, 16 பட்டை லிங்கமான சுவர்ணபுரீஸ்வரரை கார்த்திகை சோமவாரத்தில் வழிபடுவது சிறப்பு. இத்தலம் விழுப்புரம் மாவட்டம் தென்பொன்பரப்பியில் உள்ளது.

சிவனின் தரிசனம் வேண்டி 16 ஆண்டு காலம் கடும் தவம் மேற்கொண்டார் காகபுஜண்ட சித்தர். இவர் மேற்கொண்ட தவத்தின் காரணமாக இறைவன் 16 முகங்களை கொண்டவராக லிங்கமாக காட்சி தந்தார். இந்த சித்தர் இறையடி சேர்ந்தபின், வானகோவராயன் என்ற மன்னன் இவ்விடத்தில் கோவில் எழுப்பினான். இத்தலத்தின் இறைவன் அருளால் இப்பகுதி மக்கள் பொன், பொருளுடன் செல்வச் செழிப்பாக வாழ்ந்தனர். எனவே இத்தலம் "பொன்பரப்பி' என்றும், இறைவன் "சுவர்ணபுரீஸ்வரர்' என்றும், அம்மன் "சுவர்ணாம்பிகை' என்றும், பைரவர் "சுவர்ண பைரவர்' என்றும் அழைக்கப்படுகின்றனர்.

இத்திருத்தலத்தின் மூலஸ்தானமும் அர்த்த




www.aanmeegamalar.com

மண்டபமும் எப்போதும் உஷ்ணத்துடன் இருக்கும். ஏனென்றால் இத்தலத்தில் 5.5 அடி உயரமுள்ள சிவலிங்கத்தை சூரியகாந்தக்கல்லால் வடித்துள்ளனர். சிவபெருமான் இத்தலத்தில் அக்னி சொரூபமாக உள்ளார். இங்குள்ள சிவலிங்கம் சித்தர் பிரதிஷ்டை என்பதால், கிரக தோஷம் உள்ளவர்கள், சிவனுக்கு தேனபிஷேகம் செய்து வழிபடுகின்றனர். சூரியகாந்தக்கல் நவபாஷாணத்திற்கு ஒப்பானது. லிங்கத்திற்கு அபிஷேகம் செய்த தீர்த்தத்தை



பருகினால் நோய்கள் விரைவில் குணமாக குணமடைகின்றன. மேலும் குழந்தை செல்வம் வேண்டுவோர், ஐப்பசி பௌவுர்ணமியில் நடைபெறும் அன்னாபிஷேகத்தின் போது தரப்படும் பாகற்காய் குழம்பை பிரசாதமாக சாப் பிடுகிறார்கள்.

இத்தலத்திலுள்ள இறைவன் பதினாறு பட்டைகளுடன் இருப்பதால் பதினாறு முக லிங்கம் என்று அழைக்கப்படுகிறார். பொதுவாக பதினாறு முக லிங்கத்தில், அதன் பாணம் மட் டுமே 16 பட்டைகளுடன் இருக்கும். ஆனால், இங்கு ஆவுடையாரும் (பீடம்) 16 பட்டைகளுடன் அமைந்துள்ளது தனி சிறப்பு.

இத்திருத்தலத்தில் உள்ள அம்பாள் மகாலட்சுமி அம்சத்துடன் சுவர்ணாம்பிகை என்ற பெயருடன் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார். அம்பாள் கிழக்கு பார்த்து நின்றிருந்தாலும், இவளது முகம் சிவன் இருக்கும் திசை நோக்கி சற்று திரும்பியிருக்கும். காகபுஜண்டர், மனைவி பகுளாதேவி ஆகியோரின் ஜீவசமாதி அம்பாளின் பார்வையில் படும்படி உள்ளது.

சந்திர தோஷம், சனி தோஷத்தால் பாதிக்கப்பட்டவர்கள் இத்தலத்தில் வழிபட்டால் தோஷங்கள் நீங்கும்.




காகபுஜண்டர் சித்தர், சிவனின் தலையிலுள்ள சந்திரனின் கலையிலிருந்து தோன்றியவர். நினைத்த நேரத்தில் காக வடிவம் எடுக்கும் தன்மை கொண்டவர். இத்தலத்தில் உள்ள நந்தி சிறியதாக இருக்கும். ராகு தோஷ நிவர்த்திக்காக இந்த நந்திக்கு பால் அபிஷேகம் செய்யப்படுகிறது. அப்போது அபிஷேகப்பால் நீல நிறமாக மாறுகிறது. "பால நந்தி' என்பது இதன் திருநாமம்.

சிவனுக்கு பின்னால் மகாவிஷ்ணு ருத்ராட்சம் அணிந்து காட்சியளிக்கிறார். சிவனும் தானும் ஒன்றே என்பதை காகபுஜண்டருக்கு உணர்த் துவதற்காக இவ்வாறு காட்சி தருகிறார். முருகன் ஆறுமுகத்துடனும், 12 திருக்கரங்களுடனும் 8 அடி உயரத்தில் மயிலில் அமர்ந்த கோலத்தில் உள்ளார். முருகனுக்கு வலது பக்கம் உள்ள வள்ளி தலை சாய்த்து நிற்கிறாள். கருவறை வாசலில் துவாரபாலகர்களுக்கு பதிலாக துவார லிங்கங்கள் உள்ளன.

மூலஸ்தானத்தில் காகபுஜண்டரின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்க இங்குள்ள பாணலிங்கத்திற்கு, பாலில் மிளகை அரைத்து கலந்து தடவி வழிபாடு செய்கின்றனர். அவிட்டம் நட்சத்திரத் திற்குரியவர்கள் தங்கள் ஜென்ம நட்சத்திரத்தன்று, சிவனுக்கு தேனபிஷேகம் வழிபடுவது சிறப்பு.

சேலத்தில் இருந்து கள்ளக்குறிச்சி சென்று அங்கிருந்து 27 கி.மீ. தூரத்தில் உள்ள அம்மைய கரகம் அடையலாம்.

அங்கிருந்து பேருந்தில் சென்றால் ஒரு கி.மீ. தூரத்தில் கோவில் உள்ளது. கோவில் காலை 5.30லிருந்து இரவு 9.30 மணி வரை தரிசிக் கலாம்.

எந்த விதமான கட்டணமும் இல்லை

# தரத்தில் முதலிடம்

# முற்றிலும் இலவசம்



உலக அளவில் தரமான ஆன்மிக இ-புத்தகமாக வெளிவரும் **ஆன்மிக மெயில் புத்தகம்**

## இலவசமாக படிக்க

aanmeegamalar.com

aanmeegamalr app-லும் படிக்கலாம்

GET IT ON Google Play

உங்கள் இ-மெயில் முகவரியை எங்களுக்கு அனுப்பிவைத்தும் பெற்றுக்கொள்ளலாம் கீழ்கண்ட வாட்சப் எண் மற்றும் இமெயில் முகவரிக்கு உங்கள் இமெயில் முகவரியை அனுப்பிவைக்கவும்

பெற 9444228203

GMail இமெயிலில் பெற aanmeegamalar@gmail.com

# கோடி பாவங்ளை போக்கும்
# அருள்மிகு ஸ்ரீ ருத்திரகோடீஸ்வரர்

தொண்டைவளநாட்டில் காஞ்சி மாநகருக்கு தென்கிழக்கில் திருக்கழுக்குன்றம் அமைந்துள் ளது. சென்னையிலிருந்து சுமார் 70 கி.மீ. தூரத்திலும், செங்கல்பட்டிலிருந்து 15 கி.மீ.தூரத் திலும் இச்சிவாலயம் அமைந்துள்ளது. திருக் கழுக்குன்றம் பேருந்து நிலையத்திலிருந்து 3 கி.மீ. தூரத்தில் ருத்திகோட்டீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ளது.'

ஆலயம் அனைத்தும் ஆகம சாஸ்திரப்படி அமைக்கப்பட்டுள்ளது. சுமார் 2600ஆண்டுக ளுக்கு முற்பட்ட ஆலயமாகும். மன்னர்களால் கட்டப்பட்டு போற்றி பாதுகாக்கப்பட்ட கலைப் பொக்கிஷமாக திகழ்கிறது. திருக்கழுக்குன்றம் அருள்மிகு ஸ்ரீ அபிராமநாயகி உடனுறை அருள்மிகு ஸ்ரீ ருத்திரகோடஸ்வரர் ஆலயம் வடிவமைப்பில் காளிங்க நர்த்தனர். கோயிலைக் கட்டிய மன்னர் மற்றும் மன்னர்கள் சிலர் உருவங்கள் மஹரி ஷிகளின் உருவங்கள் தலையில் பலாப்பழம் சுமந்து நிற்கும் மனிதர். பல தூண்களில் பலவித வடிவங்களில் சிவலிங்கங்கள் விநாயகர், முருகர் தனது இருகைகளையும் தலைக்குமேல் கூம்பிட்டு வணங்கும் பானா, ருத்ரன் போன்ற சிறப்பம்சங்கள் பொருந்திய சியா ரூபங்கள் புடைப்பு சிற்பங்கள் காணப்படுகின்றன.

தேவ கோஷ்டத்தில் ஸ்ரீ நர்த்தனகணபதி, ஸ்ரீ தட்சிணாமூர்த்தி ஸ்ரீ மஹாவில் பிரம்ம தேவர் ஸ்ரீ துர்கை போன்ற கோஷ்ட மூர்த்தி கள் அமைந்து அருள்பாலிக்கின்றனர்,சண்டிகேஸ்வரர் சந்நிதியில் கம்பீரமான தோற்றத்துடன் அருள் பாலிக்கிறார்.

பைரவர் பெருமான் நாய் வாகனத்துடன் அற்புதக் கோலத்துடன் வீற்றிருந்து அருள்பாலிக் கிறார். சுவாமியின் மூலஸ்தானத்தின் பின்புறம் கன்னிமூல கணபதியும், வள்ளி தெய்வானை சமேத ஸ்ரீ ஷண்முகப்பெருமாளும் அருள் கூட்டு கின்றனர்.

மஹா மண்டபம் மிகவும் பெரிய மண்டபமாக விளங்குகிறது. சூரியன், சந்திரன் இருவரும் அருள்பாலிக்கின்றனர். அர்த்தமண்டபம் அந் தரானம் கருவறை அமைப்புடன் மூலவர் ஸ்ரீ ருத்ரகோடஸ்வரர் திருவருள் கூட்டுகிறார். அம்பிகை தெற்கு நோக்கி அபிராமிநாயகியாக வீற்றிருந்து அருள்பாலிக்கிறார். வெளியே நந்தி மண்டபம் அழகுற அமைந்துள்ளது. ஆலய வெளிச்சுவற்றில் புடைப்பு சிற்பமாக நந்திதேவர் சுயம்பிரபை


www.aanmeegamalar.com














நந்தியெம்பெருமானின் மூச்சுக்காற்றால் பூமியில் புதைந்திருக்கும் கருடாழ்வார்

தேவியுடன் அருளுகிறார். ஸ்ரீ நந்திகேஸ்வரர் சந்நிதிக்கு எதிரில் நந்தியெம்பெருமானின் மூச்சுக்காற்றால் பூமியில் புதைந்திருக்கும் கருடாழ்வார் வீற்றிருக்கிறார். நான்கு நிலை இராஜ கோபுரத்துடன் அமைந்துள்ளது. இச்சிவாலயம்.

நால்வர் பெருமக்களில் திருநாவுக்கரசுப் பெருமானால் வைப்புத் தலமாக பாடல் பெற்ற ஆலயம் ஸ்ரீ ருத்ரகோகஸ்வரர் ஆலயமாகும் ஸ்ரீ ருத்ர கோடிஸ்வரர் சுயம்புலிங்க மூர்த்தியாக உள்ளார். கோடி உருத்திரர்கள் தனித்தனியாக சிவலிங்கம் வைத்து பூஜித்த தலம் ஸ்ரீ ருத்திரகோடீஸ்வரர் தலமாகும்.

திருக்கயிலையில் வாசம் செய்யும் எம்பெருமான் பரமேஸ்வரனிடம் திருநந்திதேவர் பூலோகத்தில்இருக் கின்ற உருத்திரகோடி தலத்தின் பெருமைகளை அறிய வேண்டி விக் ஞாபனம் செய்கிறார். எம்பெருமான் பரமேஸ்வான் இப்பூவுல கில் யாம் வசிக்கும் 25 தலங்களில் எம் இதய பாகமாக உருத்திர கோடி தலம் விளங்குகிறது என்றார்.

பூலோகத்தில் அசுரர்களை அழிப்பதற்காக சர்வேஸ்வரன் திருமேனியிலிருந்து பலம் பொருந்திய கோடி உருத்திரர்கள் தோன்றினர். அவர்கள் மிகுந்த தவபலம் பெற்றவர்கள். 32 ஆயுதங்களை ஏந்தியவர்கள் கோடி உருத்திரர்கள் சிவபெருமானை வணங்க இவ்வுலகத்தை காத்து நிற்க எம்பெருமான் ஆணையிட்டார்.

தேவர்கள் அமுதம் பெற வேண்டி பாற்கடலைக் கடைவதற்கு மத்தாக மந்தார மலையைப் பெயர்த்தனர். அதன் பாதாளத்திலிருந்து கொடிய அசுரர் கூட்டத்தினர் திரளாக வெளிவந்தனர்.

பெருமளவில் குடிமக்களை அழித்தும், முனிவர்கள் தவத்தைக் களைத்தும்,தேவர்களை துன்புறுத்தியும் முனிவர்கள், தேவர்கள், யோகிகள் அனைவரையும் அழித்து நாசமாக்குகிறார்கள் என்பதை அறிந்து பிரம்மன், இந்திரன், தேவ முனிவர்களுடன் திருக்கயிலை நாதனை துயரத் துடன் வேண்டி துதி செய்தனர். அரக்கர் கூட்டம் அழிவை ஏற்படுத்தி வானுலகம், பூவுலகம் அழியத் தொடங்கி விட்டன என்று சிவபெருமானிடம் வேண்டி நிற்க சிவபெருமான் கோடி உருத்திரர்களை அழைத்து அசுரர்களை அழிக்க ஆணை இடுகிறார். சிவபெருமானின் கட்டளையை ஏற்று அசுரர்களை கோடி உருத்திரர்கள் அடியோடு அழிக்கின்றனர்.



வேலன்

சிவபெருமானிடம் கோடி உருத்திரர் களும் அசுரர்களைக் கொன்ற பாவம் நீங்க வழி கேட்டனர். சிவபெருமானும் அதற்கு உருத்திரர்கள் ஒவ்வொரு வரும் என்னை நித்தமும்தவமியற்றி அர்ச்சனை செய்து பூஜித்தால் எத்தகைய கொடிய பாவங்களும் நீங்கிவிடும் என்றார். திருக்கழுக்







குன்றத்தில் அமைந்துள்ள வேதகிரிமலையே அதற்கு தகுந்த தலம் என்று சிவபெருமான் கூற கோடி உருத்திரர்களும் வேதமலையில் தவமியற்றி அர்ச்சனை செய்து பூஜித்ததன் பயனாக அவர்கள் அனைவரின் பாவங்களும் நீங்கப்பெற்றனர். உருத்திரர்கள் மஹாதேவனிடம் தங்கள் பெயரிலேயே தீர்த்தமும் தலமும் விளங்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டனர்.

அதன்படியே ருத்திரகோடிதலம் என்றும் ஈசனுக்கு ருத்திர கோடீஸ்வர் என்றும் உமைய வளுக்கு ருத்திரகோட்டீஸ்வரி என்றும் தீர்த்தத் திற்கு ருத்ரகோடி தீர்த்தம் எனவும் பெயர் பெற்று விளங்கலாயிற்று.

காசி அம்பலம் கமலை சோணாசலம் காஞ்சி மாசில் காளத்தி மதுரையம்பதி அங்க மோசையார் கால் கோடி ருத்திரர் வந்தியற்றும் பூசை மாத்தலம் நமக்கென்றும் இதய புண்டரிதம் என திருவாக்கு அருளினார்.

காசி மாநகர் தில்லை, திருவாரூர், காஞ் சிபுரம் குற்றமற்ற காளத்தி மற்றும் மதுரை போன்றவை எமது உடல் பாகமாக உள்ளது. ஓசையெழ ஒலிக்கின்ற கழல்களை அணிந்த கோடிருத்திரர்கள் வழிபட்ட இவ்விடம் இதய பகுதியாகும். இங்கு எம்மை தரிசிப்பவர்கள் பெறும் பேற்றினை இம்மையிலும் மறுமையிலும் அடைவார்கள் என்றார் ஈசனார்.

காழிக் காலத்தில் உலக உயிர்களை எல்லாம் தன்னுள் ஒடுக்கிய ஈசனை கயிலையில் காண் பதற்கு திருப்பாற்கடலிருந்து மஹாவிஷ்னு கருட வாகனத்தின் மீதேறி வந்தார். கயிலையின் முதற்கோபுர வாயிலில் தன் வாகனத்தை நிறுத்தி விட்டு நந்தியெம்பெருமானை வணங்கி உள்ளே பரமேஸ்வரனை தரிசிக்கிறார். சிவபெருமானும் தன்னை பணிந்து நிற்கும் மஹாவிஷ்ணுவை தன் அருட்பார்வையால் ஆசிர்வதிக்கிறார். அப்போது முன் கோபுர வாயிலில் இருந்த கருடாழ்வார் அகந்தையால் நந்தியம் பெருமானை நோக்கி நீ இரந்து பிச்சை எடுத்து உண்பவன் வாகனம். நீ என்னை கோபித்து என்ன செய்ய முடியும் என கேட்டார். எல்லாம் வல்ல சிவபெருமானை நிந்தித்து பேசியதாக நந்தியம்பெருமான் கடும் கோபம் கொண்டார். எல்லாம் திசைகளும் கலங் கியது தேவர்கள் திகைத்தனர். சிவநிந்தை செய்த கருடனை கொன்று விடுகிறேன் என்று நந்தியம்பெருமான் பெருமூச்சு விட்டார்.

அந்த மூச்சுக்காற்றில் கருடன் நூறு காத தூரம் உருண்டு போனார். மீண்டும் நந்திதேவர் மூச்சுக் காற்றை உள்ளிழுக்க நாசி துவாரத்தில் வருந்தியது கருடன். அப்படியும் கருடனின் அகந்தை அடங்கவில்லை. நந்தியின் சுவாசக் காற்றோ உலகம் அழியும்போது உண்டாகும்காற்றினைப் போல் கருடனைத் தூக்கி வீசியது. கருடனின் உடல் நொறுங்கியது. சிறகுகள் ஒடிந்தன. கருடன் செய்வதறியாது கலங்கி நந்தியின் மகிமையை அறியாமல் கெட்டேனே நாராயணா| வாசுதேவா | கமலக்கண்ணா என்று ஓலமிட என்னை காப் பாற்று என கதறிய கருடனின் குரல் கேட்ட மஹாவிஷ்ணுவிற்கு விபரீதம் புரிந்து விட்டது.

மஹாவிஷ்னு பரமேஸ்வானிடம் கருடன் அகங் காரத்தால் நந்தியெம்பெருமானின் கோபத்திற்கு ஆட்பட்டு கஷ்டப்படுகிறான். தேவரீர் உளம் கனிந்து கருடனை மன்னித்து விடுவிக்க நந்திதேவருக்கு உத்திரவிடவேண்டும் என வேண்ட, சிவபெருமான் நந்தியெம்பெருமானை அழைத்து கருடன் அறியாமல் செய்த குற்றத்தை மன்னித்துவிடச் சொன்னார். ஆனால் நந்தியம் பெருமான் "சிவபெருமானை நிந்தித்த கருடனை விடேன் என்று கூறினார்.

சிவபெருமான் கட்டளையை மறுத்துக் கூறிய தால் சிவ அபராதத்திற்கு ஆளாகி விட்டோமோ

www.aanmeegamalar.com

என்று சிவனிடம் நந்திதேவர் சிவகட்டளையை மீறிய பாவம் நீங்க வழிசொல்ல வேண்டும் என்று வேண்டுகிறார். நந்தியம்பெருமான் செய்த சிவ அபராதத்திற்கு பூலோகத்தில் உருத்திரகோடி தலத் திற்கு சென்று அங்குள்ள உருத்திர கோடிஸ்வாரை வில்வத்தால் அர்ச்சிக்கால் சிவ அபராதம் நீங்கும் என்றார். அதன்படி நந்திதேவரும் வில்வத்தால் சிவபெருமானை அர்ச்சித்து சிவஅபராதம் நீங்கப்பெற்று பரம்பொருளின் அண்மையை அடைகிறார். அதற்கு அடையாளமாக இன்றும் இந்த ஆலய கோபுரத்தின் கற்கார சுவற்றில் பெருநந்தி தேவனார் மற்றும் சுயம்பிரபை தேவியும் கைகூப்பியபடி வீற்றிருக்கும் புடைப்புச் சிற்பம் காணப்படுகிறது.

ருத்திரகோடி ஆலயத்தில் வாயிலில் உள்ள பெரிய நந்திதேவரின் முன்புறம் நுழைவு வாயிலின் ஓரம் சுமார் ஒன்றரை அடி உயரம் பூமியில் புதையுண்ணட கருடாழ்வார் சிலையைக் காணலாம்.

இச்சிவாலயத்தின் தல விருட்சம் வாழைமரம். ஆலயத்தில் பத்ராட்ச மரம் உள்ளது. இந்த மரம் காய்ப்பதில்லை.பூக்கள்மட்டும்பூக்கிறது.இந்தமரம் உருத்திராட்ச பரத்தின் வகையைச் சார்ந்ததாகும். திருக்கழுக்குன்றம் மலைமீது வேதகிரீஸ்வரர் ஆலயமும் கீழே பக்தவச்சலேஸ்வரர் ஆலயமும், தீர்த்தகிரீஸ்வரர் ஆலயமும், 2 கி.மீட்டர் தூரத்தில் ருத்திரகோடிஸ்வரர் ஆலயமும் அமைந்துள்ளது. இந்த நான்கு ஆலயங்களின் தல விருட்சம் வாழை மரமாகும். நாம் ஒருமுறை செயத தானத்தையும், ஜெபத்தையும் கோடிமுறை செய்த பலனாக நமக்குத் தருபவர் ருத்ரகோடீஸ்வரர்.

ஒருவர் கோடி முறை பாவங்கள் செய்தி ருந்தாலும் ருத்திரகோடீஸ்வரரிடம் தனது தவறுகளை உணர்ந்து வேண்டிக் கொள்வதன் மூலம் அனைத்து பாவங்களையும் கணத்தில் போக்கிடுவார். ருத்திரகோட்டீஸ்வரரிடம் பாவ மன்னிப்பு பெற்ற பின்னர் மீண்டும் எந்த பாவங் களையும் செய்யக்கூடாது.அப்படியே பாவங்கள் செய்தாலும் எத்தனை பிறவி எடுத்தாலும் பாவங்களிலிருந்து விடுபட இயலாது என்பது உறுதி. இப்படியாக கோடி ருத்திரர்கள் அசுரர்களை கொன்ற பாவங்களை போக்கியும் கருடாழ்வரின் அகந்தையை அடக்கிய நந்திதேவரின் சிவ அபராதத்தினை போக்கியும் கருணை புரிந்து எம்பெருமான் ருத்திரகோட்டீஸ்வரரை வணங்கி நாம் தெரிந்தோ தெரியாமலோ செய்தபாவங்களை அகற்றிட அவன் ஆலயம் நாடிச்செல்வோம்...

– வேலன், போன்: 9894836096
திருக்கழுக்குன்றம்.

www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்




ஆன்மிக விஷயங்களின்
முழு வீடியோ
aanmeegamalar
YouTube
யூ–டியூப் சேனலில்
பதிவிடப்பட்டுள்ளோம்.
நமது சேனலில் சென்று
முழுவதுமாக பார்த்து
பயன் பெறுங்கள்...

ஆன்மிக சேவை
செய்யும் நமது
சேனலை
Subscribe
like & share

# ராசி பலன்கள்

## 16.03.2021 முதல் 31.03.2021 வரை

### மேஷம் ராசி அன்பர்களே உங்களுக்கு



குடும்பதில் குழப்பங்கள் உண்டா கும் வீடு, வாகன, பொருள்சேர்க்கை ஏற்படும் தாய் வழி உறவுகளால்நன்மை ஏற்படும் ஆரோக்கியம் மேம்படும் தொழில் முன்னேற்றம் ஏற்படும். ஆரோக் கியம் சீராக இருக்கும் உயர் அதிகரிகளால் பாராட்டுகள் குவியும் கௌரவம் தரக்கூடிய விஷ யங்கள் நடக்கும், வீடு, வாகன, பொருள் சேர்க்கை ஏற்படும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு அதி கரிக்கும். சேமிப்பு அதிகரிக்கும். குலதெய்வ கோவிலுக்கு சென்று வருவீர்கள் வெளிநாடு சமந்தமான விஷயங்களில் முன்னேற்றம் ஏற்படும்

### ரிஷபம் ராசி அன்பர்களே உங்களுக்கு



அரசாங்கதால்நன்மைஏற்படும்செலவுகள்குறையும் குடும்ப வாழ்க் கை மகிழ்ச்சிகரமாக இருக்கும் பெரிய அளவிலான கடன்களை கட்டிமுடிப்பீர்கள் உடல்நலனில் கவணம் தேவை வீண் வாக்கு வாதத்தை தவிர்த்து கொள்வது நல்லது பெரியோரின் ஆசீர்வாதம் கிடைக்கும் வழக்கு விஷயங்களில் வெற்றிகள் வந்து சேரும் மாணவர்களுக்கு படிப்பில் நல்ல முன்னேற்றம் உண்டு குழந்தைகளால் மகிழ்சிகள் வந்து சேறும் மாத தொடக்கத்தில் லாபம் அதிகமாகஇருக்கும் சுப செலவுகள் ஏற்படும்.

### மிதுனம் ராசி அன்பர்களே உங்களுக்கு



குடும்பதில் சுப நிகழ்சிகள் நடைபெறும் குழந்தை களால் மகிழ்ச்சிகள் அதிகரிக்கும் தொழில் மூலம் வருவாய் அதிகரிக் கும் மாணவர்கள் படிப்பில் அதிக கவனம் செலுத்துவது நல்லது திரு மணவயதில் உள்ளவர்களுக்கு திருமணம் கைகூடும் தொழிலில் போட்ட திட்டங்கள் வெற்றி யை தேடிதரும் வீடு வாகன சேர்க்கை ஏற்படும் தந்தை வழி உறவுகளால் வர வேண்டிய சொத்துக்கள் வந்து சேரும்.ஆரோக்கியம் மேம்படும் வேலையில் சாதகமான சூழ் நிலை ஏற்படும் வெளியூர் பயணங்களை மேற்கொள் வீர்கள்

### கடகம் ராசி அன்பர்களே உங்களுக்கு



குடும்பதில் ஒற்றுமை அதிகரிக்கும் செலவுகள் அதிகரிக்கும் கல்வியில் நல்ல முன்னேற்றம் காணப்படும் புதிய தொழில்களை தொடங்குவீர்கள் உயர் அதிகாரிகளால் நன்மை ஏற்படும் உங்களுடைய திட்டங்களில் கவணம்தேவை சக ஊழியர்களிடம் பேசும்பொது கவனமாக பேசவும் திடீர் பண வரவுகள் ஏற் படும் கடன்பிரச்சனைகள் முடிவுக்குவரும் நீண்டநாட்களாக வர வேண்டிய பணம் வந்து சேரும் இந்த மாதம் தொழில் நன்றாக இருக்கும் மாணவர்களுக்கு மிகசிறந்த காலம் திருமண முயற்சிகளில் கவனம் தேவை.

### சிம்மம் ராசி அன்பர்களே உங்களுக்கு



சுப விரயங்கள் ஏற்படும் பதவி உயர்வு ஏற்படும் கல்வியில் நல்ல முன்னேற்றம் காணப்படும் குடும்ப உறவுகளில் விட்டுக்கொடுத்து போவது நன்மை யை தரும்புதிய முயற்சிகளில் கவனம் தேவை . நீண்ட நாட்களாக திருமான மாகாதவர்களுக்கு திருமணம்கைகூடும் தொழிலுக்காக கடன் வாங்குவீர்கள் உயர் அதிகாரிகளால் பாராட்டபடுவீர்கள் வசதிகள் அதி கரிக்கும் தான தருமங்கள் செய்வீர்கள் ஆன்மீக சுற்றுல்லா குடும்பதுடன் சென்று வருவீர்கள் தர்ம காரியங்களில் ஈடுபடுவது நன்மையை தரும்.

### கன்னி ராசி அன்பர்களே உங்களுக்கு



பணவரவு அதிகரிக்கும் தொழிலில் லாபங்கள் அதிகரிக்கும் எதிர்பாராத பணம் வந்து சேரும் ஆன்மீக பயணம் செல்வதற்கான வாய்புகள் ஏற்படும் புதிய வீடு,வாகன,பொருள் சேர்க்கை ஏற்படும்.மனைவியிடம் கருத்து வேறுபாடுகளை தவிர்ப்பது நல்லது உத்தியோக உயர்வு உண்டு, ஆரோக்கியம் மேம்படும் வேலையில் மாற்றம் ஏற்படும் குடும்பதில் மகிழ்ச்சிகள் நிலவும். கொடுக்கள் வாங்களில் கவணம் தேவை.அரசாங்க ஆதரவு உண்டாகும்.

www.aanmeegamalar.com

### துலாம் ராசி அன்பர்களே உங்களுக்கு



வெளியூர் பயணங்களை தவிர்ப்பது நல்லது குலதெய்வவழிபாடு நன்மையை தரும்தொழிலில் மாற்றங்கள் செய்ய வேண்டாம்,பொருளாதார சிக்கல்கள் ஏற்படும் குடும்பத்தில் கருத்து வேறுபாடு அதிகரிக்கும் கொடுக்கள் வாங்களில் கவணம் தேவை திருமண முயற்சிகளில் தொய்வு ஏற்படும் மாணவர்கள் படிப்பில் அதிக கவணம் செலுத்த வேண்டும். இந்த மாதம் நீண்ட நாட்களாக வரவேண்டிய பணம் வந்துசேரும் கடன்பிரச்சனைகள் தீரும் படிப்பில் பின்தங்கிய நிலை காணப்படும்.




### விருச்சிகம் ராசி அன்பர்களே உங்களுக்கு



திருமணம் கைகூடும் பணவரவு அதிகரிக்கும் நிதானமாக செயல்படுவது நல்லது வெளிநாட்டுதொடர்பான விஷயங்களில் வெற்றிகள் வந்து சேரும் மாணவர்களுக்கு படிப்பில் கவணக்குறைவு ஏற்படும் பதவி உயர்வு ஏற்படும் வீண் செலவுகள் அதிகரிக்கும் . சொந்த தொழிலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும் முக்கிய முடிவுகளில் கவணம் தேவை எதிரிகளால் பிரச்சனைகள் எயற்படுவதற்க்கு வாய்ப்பு உள்ளது வெளிநாட்டு வேலை கிடைக்கும் குடும்பதில் ஒற்றுமை நிலவும் குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டாகும்

### தனுசு ராசி அன்பர்களே உங்களுக்கு



உங்களுடைய முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும் தேவைக்கு அதிகமாக பணம் கிடைக்கும் அவசர முடிவுகள் எடுப்பதை தவிர்த்துகொள்ளவும் மனைவியின் அன்பு அதிகரிக்கும் ஆன்மீக பயணங்களை மேற்கொள்வீர்கள் அனைத்து விஷயங்களிலும் பொறுமையாக செயல்படுவது நன்மையை தரும் பொருளாதார வளர்ச்சி நன்றாகவே இருக்கும் வேலையில் உள்ள பிரச்சனைகள் தீரும் பெரியோர்களின் ஆலோசனைபடி செயல்படுவது நல்லது மானவர்களுக்கு படிபில் மந்தநிலை காணப்படும். உங்களுடைய முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும் தேவைக்கு அதிகமாக பணம் கிடைக்கும் அவசர முடிவுகள் எடுப்பதை தவிர்த்துகொள்ளவும்

### மகரம் ராசி அன்பர்களே உங்களுக்கு



உடல்நலனில் கவணம் தேவை வீண் வாக்கு வாதத்தை தவிர்த்து கொள்வது நல்லது பெரியோரின் ஆசீர்வாதம் கிடைக்கும் வழக்கு விஷயங்களில் வெற்றிகள் வந்து சேரும் மாணவர்களுக்கு படிப்பில் நல்ல முன்னேற்றம் உண்டு குழந்தைகளால் மகிழ்சிகள் வந்து சேறும் மாத தொடக்கத்தில் லாபம் அதிகமாகஇருக்கும் தொழிலில் புது புது சிந்தனைகள் மூலம் வெற்றிகள் உண்டாகும் செலவுகள் குறையும் குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக இருக்கும் பெரிய அளவிலான கடன்களை கட்டிமுடிபீர்கள்

### கும்பம் ராசி அன்பர்களே உங்களுக்கு



வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும் ஒருவித பயம் எப்போதும் இருக்கும் கொடுக்கள் வாங்களிள் கவணம் தேவை பணவரவு சீராக இருக்கும் கௌரவம்அதிகரிக்கும் மனைவி மூலம் சொத்துகள் சேரும் நீண்ட நாட்களாக விற்பனையாகாத இடம் விற்பனையாகும் கொடுக்கவேண்டிய கடன்களை கொடுத்து முடிபீர்கள் தொழிலில் லாபங்கள்அதிகரிக்கும் மனைவி மூலம் சொத்துகள் சேறும் ஊழைப்புகேற்ற ஊதியம் வந்து சேரும்குடும்பதில் பிரச்சனை நிலவும் மாணவர்களுக்கு படிப்பில் ஆர்வம் அதிகரிக்கும்

### மீனம் ராசி அன்பர்களே உங்களுக்கு



நீண்ட நாட்களாக திருமானமாகாதவர்களுக்கு திருமணம்கைகூடும் சுப விரயங்கள் ஏற்படும். தொழிலுக்காக கடன் வாங்குவீர்கள். ஆன்மீக சுற்றுல்லா குடும்பதுடன் சென்று வருவீர்கள். உயர் அதிகாரிகளின் நட்பு எற்படும்.ஆரோக்கியம் சீராக இருக்கும்.செலவீனங்களை குறைத்து கொள்வது நல்லது புது முயற்சிகள் வெற்றியை தேடி தரும் பூர்வீக சொத்துக்களால் ஆதாயாம் உண்டாகும் திருமணமாகி நீண்ட நாட்களாக குழந்தைபாக்கியம் இல்லாதவர்களுக்கு குழந்தைபாக்கியம் உண்டாகும்




# இந்துமதமும் வேதமும்

இதுவரை சிந்து சமவெளி நாகரீகத்தில் இந்து மதத்தின் மூலக் கூறுகள் பதிந்திருப்பதை விரிவாக சொல்லியதற்கு மிக முக்கியமான காரணங்கள் உண்டு. அதாவது சிந்துவெளி நாகரீகமும் வேதகால நாகரீகமும் வேறு வேறானது இரண்டுக்கும் சம்பந்தம் இல்லாதது என்பதை தெளிவுபடுத்துவதே முக்கிய நோக்கமாகும். இதில் சிந்து வெளி நாகரீகம் வேதகாலத்திற்கு முந்தியதா பிந்தியதா என்ற முடிவை இதுவரை எந்த ஆராய்ச்சியாளனும் எட்டவில்லை என்றாலும் சிந்து மக்கள் பயன்படுத்திய சமய சின்னங்கள் வேதங்களுக்கு முற்பட்டவை என்பதில் எந்த மாற்றமும் இல்லை. இதற்கு வேதங்களிலேயே பல ஆதாரங்கள் கிடைக்கின்றன. நான்கு வேதங்களை மிக நுணுக்கமாக ஆராயும்பொழுது இந்த உண்மை நமக்கு தெரியவருகிறது.

இந்தியாவின் பூர்வகுடிகள் ஆரியர்களா, திராவிடர்களா என்பதை இதுவரை யாரும் அறுதியிட்டு கூறமுடியவில்லை என்றாலும் இந்த இரு இனங்களுக்கு முன்பே மனித சமூகம் இந்தியாவில் நல்ல முறையில் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் பல உள்ளன.அந்த மனித சமூகத்திடமிருந்து திராடவிடர்களோ ஆரியர்களோ நாகரீகத்தை பெற்றிருக்கிறார்கள் என்பது மிகவும் உறுதியாகும். அதாவது நாகரீகத்தை பெயர் தெரியாத இந்திய பூர்வ குடிகள் இவ்விரு இனத்தாருக்கு வழுங்கியிறுக்கிறார்கள். அத்தகைய நாகரீக தானத்தை முதன் முதலில் பெற்றவர்கள் திராவிடர்களாகவே இருக்க வேண்டுமென்று பரவலான கருத்து உள்ளது. அதை மறுப்பதற்கு போதிய ஆதாரம் இன்று வரை இல்லை என்பதனால் திராவிடர்களே வேதகாலத்திற்கு முற்பட்டவர்கள் என்பதை ஏற்று கொள்வதை தவிர இன்று நமக்கு வேறு வழியில்லை. இதன் அடிப்படையில் இந்து மதம் வேதங்களுக்கு முன்பு எப்படி இருந்தது அது எப்படி வேதங்களோடு இணைக்கப்பட்டிருக்கிறது என்பதை விரிவாக பார்ப்போம்.

வேதங்களுக்கு முற்பட்டதாக கருதப்படும் திராவிட நாகரீகத்தில் வேதக் கருத்தக்களின் சேர்க்கையால் இந்து மதக் கருத்துக்கள்உருவானதா அல்லது வேத நாகரீகத்தில் திராவிடக்கருத்துகளின் சேர்க்கையால் அவை உண்டானவைகளா என்ற குழப்பங்கள் வலுவாக இருந்தாலும் இந்து மதக் கருத்துக்கள் என்பது வேத நாகரீகத்திலிருந்து வளர்ந்த எளிய வளர்ச்சி அல்ல என்பதை உறுதியாக நம்ப முடிகிறது. வேத சார்பில்லாத மூலக் கருத்துக்கள் இந்து மதத்தில் பரவி கிடப்பதனால் இந்த நம்பிக்கை நமக்கு ஏற்படுகிறது.

திராவிடன் என்ற சொல் குறிப்பாக எந்த பொருளை சுட்டிக் காட்டுகிறது என்று தெளிவாக கூறமுடியாது. இச்சொல் மொழிவாரியான இனத்தை குறிக்க ஒரு மக்கள் குழுவை குறிக்க அல்லது ஒரு நாகரீக தொகுதியை குறிக்க பொதுவாக பயன்படுத்தப்படுகிறது. வட மொழியின் தாக்கம் திராவிட மொழி களில் வலுவாக இருந்தாலும் கூட அவைகள் தனது தனிதன்மையை முற்றிலுமாக இழந்துவிடவில்லை. நமது நாட்டில் ஏற்பட்ட இனக்கலப்புகள்




www.aanmeegamalar.com

இன்று எவரையும் ஆரியன் என்றோ திராவிடன் என்றோ பிரித்து கூற இயலாவிட்டாலும் வடமொழியில் கலந்துள்ள திராவிடச் சொற்களை இன்று கூட மிக எளிதாக பிரித்துக் காட்டிவிடலாம்.

அதாவது மனித இனங்கள் கலப்பினால் தனது சுயத் தன்மையை இழந்து விட்டாலும் மொழிகள் தனது தற்சார்பை இழக்கவில்லை இதனால் வேத இலக்கியங்களில் கலந்துள்ள மாறுபட்ட தன்மைகளை நம்மால் சுலபமாக பிரித்தரிய முடிகிறது. இதனால் வேதத்தில் மூலப்பாடத்தில் உள்ளவைகளோடு சம்பந்தப்படாத கருத்துகளை வேதத்திற்கு முற்பட்டக் கருத்துகள் அதில் காலம் தாழ்ந்து இணைந்த கருத்துகள் என்று கருதமுடிகிறது.



யோகி ஸ்ரீ ராமானந்த குரு

நமது நாட்டு கருத்துகளின் வளர்ச்சியில் காடுகள் பெரும்பங்கு ஆற்றியுள்ளன. முனிவர்களின் தவச்சாலைகளே அக்காலத்தியகருத்து கருவூலங்களாக இருந்திருக்கின்றன.அத் தகைய தவச்சாலைகள் காடுகளிலேயேபெருவாயாக இருந்திருப்பதினால் இந்திய கருத்துக்கும் காட்டிற்கும் உள்ள தொடர்பை தாய், மகன் தொடர்போடு ஒப்பிட்டு சொல்லலாம். ஆனால் இத்தகைய காடுகளின் சமூக பங்கு உபநிஷத காலத்திலிருந்தே தொடங்குவதாக பலர் சொல்லுகிறார்கள். அதாவது வேதகால நாகரீக சிந்தனைகளுக்கும் காடுகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று கருதப்படுகிறது.

முதல் வேதமான ரிக் வேதத்தின்ரிஷிகள் ஊர்களிலும் நகரப்பகுதிகளிலும் வாழ்ந்தவர்களே ஆவார்கள் இவர்கள் ஆழமாக சிந்திப்பதற்கு தியானம் செய்வதற்கும் காடு களை நாடியது இல்லை.

வேதத்தின் பிற்பகுதியான பிரமாணங்களும் காட்டு புற நாகரீகத்தை சார்ந்து இருக்கவில்லை. ஆனால் ஊரைவிட்டும் வீட்டைவிட்டும் ஒதுங்கி இருந்து கல்வி கற்கவேண்டும் என்ற கருத்தை முதன் முதலில் மைத்ரேய ஆரண்யத்தில் காண்கிறோம். அதாவது ஒரு இந்துவின் வாழ்க்கை முறையில் கல்வி கற்பதை தனித்திருந்து கற்க வேண்டும் என்ற கருத்தை வேதங்களோ பிரமாணங்களோ கூறாமல் பிற்காலத்தில் எழுந்த ஆரண்யங்கள் மட்டுமே வற்புறுத்துவதினால் தவச்சாலைகள் என்பது காடுகளில் ஏற்படுத்தப்பட வேண்டும். என்ற கருத்து வேதகாலத்திற்கு பிறகே ஏற்பட்டிருக்க வேண்டும் என்று நம்பத் தோன்றுகிறது. இதற்கு வேறு சில ஆதாரங்களையும் குறிப்பிடலாம்.

வேதவர்ணனைகளில் படம் பிடித்து காட்டப்படும் தெய்வங்கள் அக்கால நாகரீக சின்னங்களாக கருதப்பட்ட குதிரைகள் பூட்டிய தேர்களிலேயே பவனி வருவதை காணமுடிகிறது. காடு சார்ந்த வாழ்க்கையில் மிக முக்கிய தொழிலாக கருதப்படும் வேட்டையாடுதலை இந்த வேத தெய்வங்கள் மேற்கொண்டதாக தெரியவில்லை.

மாறாக வேதங்களில் அதி தேவதைகளாக கருதப்படாத மற்ற தெய்வங்களை குறிப்பிடும் பொழுது வேட்டையாடுதல் என்பது இணைத்து பேசப்படுகிறது. ஏறக்குறைய இந்து மதத்தின் மிக முக்கிய பிரிவுகளில் ஒன்றான சைவ சமய தெய்வங்களை பற்றி பேசப்படும் பொழுது அவைகளோடு வேட்டையாடுதலும் பேசப்படுகிறது.

இந்த இடத்தில் மிக முக்கியமான ஒரு விஷயத்தை சிந்தித்து பார்க்கவேண்டும். மனித சமூகம் தான் தோன்றிய காலத்திலேயேவிலங்குகளை பழக்கப்படுத்தி தங்களது தேவைகளுக்கு துணை புரிவதாக ஆக்கி கொள்ளவில்லைஆரம்ப கால மனிதன் விலங்குகளை வேட்டையாடி அதன் மாமிசங்களை உண்பதற்கு தெரிந்து வைத்திருந்தானே தவிர அவைகளை வேளாண்மைக்கும் பயணத்திற்கும் பயன்படுத்தலாம் என்பதை தெரிந்து வைத்திருக்க வில்லை.

எனவேஆதிகால மனிதன் தனது சிந்தனையில் தன்னை போலவே கடவுள்களும் வேட்டையாடுதலை தொழிலாக கொண்டிருக்கும் என்று கருதுவானே தவிர தேர்களை ஓட்டுவது பற்றி சிந்தித்திருக்க மாட்டான். எனவே வேட்டையாடும் தொழிலை மேற்கொள்ளும் தெய்வங்கள் சைவ சமய சார்பில் வேதங்கள் காட்டுவதால் வேத காலத்திற்கு முன்பே இந்தியாவில் இருந்த சமயம் சைவ சமயம் என்றும் அது பிற்காலத்தில் வேதங்களோடு இணைக்கப் பெற்று செழுமை பெற்றிருக்க வேண்டும் என்றும் சிந்திக்க முடிகிறது.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434

www.aanmeegamalar.com

# மனிதன் செய்யும் செயல்கள் பூமியின் சமநிலையை பாதிக்கின்றன

குருதேவர் பரமஹம்ஸ யோகானந்தர் அருளுகிறார்: “உலகத்தின் பகுதி அளவான பிரளயம் பொதுவாக மனிதர்களுடைய தீயச்செயல்களினால் ஏற்படுகிறது. நாம் அனைவரும் வெடிகுண்டுகளுடன் சண்டையிடத்துவங்கினால், இந்த நேரடியான செயலின் மூலமாக நாம் மனித இனத்தின் விஸ்தீரணத்தை தீவிரமாகக் குறைத்துவிட முடியும். மேலும் நாம் போதுமான அளவு கடினமாக உழைத்தால், ஒருவேளை நாம் இந்த உலகத்தையே அழித்துவிடவும் கூட முடியும்! இறைவன் மனிதனுக்கு அழிக்கும் ஆற்றலையும் படைக்கும் ஆற்றலையும் அளித்துள்ளான். நாம் உலகத்தை அழகாக ஆக்கியுள்ளோம். மேலும் நாம் அதை அழிக்கும் சக்தியும் பெற்றிருக்கிறோம். நாம் உலகத்தின் தூய்மையைக்குலைக்கும்பொழுது, சுற்றுச்சூழலானது ஒரு தீவிர மாற்றத்திற்கு ஆளாகிறது. இதுவே பகுதியளவான பிரளயம் எனப்படுகிறது. அத்தகையை பொங்குதல்கள் அநேக தடவைகள் நிகழ்ந்துள்ளன. நோவாவின் வெள்ளம் ஓர் உதாரணமாகும். இந்தப்பகுதி அளவான பிரளயங்கள் மனித இனத்தின் தவறான செயல்கள், அறியாமையினால் எழும் தவறுகள் ஆகியவற்றினால் விளைகின்றன. இந்த உலக சம்பவங்கள் இறைவனுக்குத் தெரியாமல் தாமாகவே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என எண்ண வேண்டாம். மேலும் மனிதனின் செயல்கள் இறைவனுடைய பிரபஞ்ச விதிமுறைகளின் இயக்கத்தின்மீது எந்த விளைவையும் ஏற்படுத்துவதில்லை என எண்ணாதீர்கள். யுகயுகங்களாக நிகழ்ந்துவந்துள்ள அனைத்தும் வான்வெளியில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. மனித இனம் வான் வெளியில் விட்டுச் செல்கின்ற தீய அதிர்வுகள் பூமியின் இயல்பான இணக்கத்தின் சமநிலையை நிலைகுலைவிக்கின்றன. நோயினாலும் தீமையினாலும் பூமி மிகுந்த பாரமாகும் பொழுது, இந்த வான்வெளி நிலைகுலைவுகளானவை நில நடுக்கங்கள் வெள்ளங்கள், பிற இயற்கை பேரழிவுகள் ஆகியவற்றிற்கு உலகம் இடம் கொடுப்பதற்குக் காணரமாகின்றன.”

மேலும் அவர் தொடர்கிறார்: “நீங்கள் ஒரு நீண்ட காலத்திற்கு தவறாக வாழும்பொழுதும் இதுபோலவேதான்: பல்வேறு இணக்கமின்மைகளும் குறிப்பிட்ட நோய்களும் உங்களுடைய உடலில் வெளிப்படத்துவங்குகின்றன. நோய் ஒரு தண்டனை அல்ல. அது நீங்கள் உங்களுக்கே உடலில்



www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

உருவாக்கிக்கொள்ளும் ஒரு நஞ்சாகும். மேலும் நீங்கள் அதை நீக்கி ஒழித்திடவேண்டும் என இறைவன் விரும்புகிறான். ஆனால் பெரும்பாலும் நீங்கள் அந்த நஞ்சை விலக்க முயற்சி செய்யும் முன்னரே தேகம் முற்றிலுமாக சீர்கேடடைந்து நீங்கள் இறந்து விடுகிறீர்கள். ஆகவே, மனித உடலைப்போலவே, பூமியும் இணக்கமின்மைகளினாலும் நோயினாலும் துன்புறுகிறது. மேலும் இதன் காரணம், உலகம் முழுவதும் உள்ள அனைத்து மக்களின் ஒன்று சேர்ந்த செயல்கள் நாம் வாழ்கின்ற கிரகத்தை பாதிப்பதுதான். அதைப்பற்றிய சந்தேகமே இல்லை. மனிதனால் உருவாக்கப்பட்ட நல்ல மற்றும் தீய கர்மவினை நிலைமைகள் தட்பவெட்ப நிலையை தீர்மானிக்கின்றன மற்றும் பாதிக்கின்றன. அவை காற்றையும் சமுத்திரத்தையும் பாதிக்கின்றன. சில சமயங்களில் நில நடுக்கங்களையும் உண்டாக்கி பூமியின் கட்டமைப்பையேகூட மாற்றுகின்றன. நாம் உலகத்தினுள் செலுத்தும் வெறுப்பு, கோபம், தீமை ஆகிய அனைத்தும் கடும் வேதனையையும் வெறுப்பையும் விளைவித்து பூமியின் காந்தசக்தியை நிலைகுலையவைக்கின்றன வான்வெளியிலுள்ள இரைச்சலைப் போன்று இந்த யுத்தத்தினால் விளைவிக்கப்பட்ட அழிவில் நாம் உலகத்தின் ஒரு பகுதியளவான பிரளத்தைக் காண்கிறோம் உயிர்கள், செல்வம், வாழ்விடங்கள் ஆகியவற்றின் நாசம் பல வழிகளில் இது நோவா வின் வெள்ளத்தைவிட மோசமானது: அது நெருப்பு, சிந்தப்பட்ட இரத்தம் ஆகிவயற்றின் வெள்ளமாகும். ஆனால் ஒரு விஷயம் ஊக்கமளிக்கின்றது. மனித இனத்தின் நல்வினை, தீவினையை விட மிகவும் அதிகம். இது இவ்வாறு இல்லாமல் இருந்திருந்தால், பூமியானது எதிர்மறை அதிர்வுகளினால் வெடித் திருக்கும். தோற்றமளிப்பவற்றிற்கு முரணாக பூமியானது ஓர் ஏறுமுகமான சுழற்சியில் உள்ளது. மேலும் நன்மையே வெல்லும்.

## சுற்றுப்புறம் நமது ஆசைகளை வடிவமைக்கிறது

குருதேவர் தொடர்கிறார்: “ஒருவருடைய சுற்றுப்புறத்திற்கு ஏற்ப ஆசைகள் உருவாக்கப்படுகின்றன. அவை உங்கள் புலன் உணர்வுகளால் ஆக்கப்படுகின்றன. ஆதலால் அவற்றின் மூலம் வரையறைக்கு உட்பட்டவையாகின்றன. ஒரு கிராமத்துச் சந்தைக்குச் செல்வது ஒரு கிறிய கிளர்ச்சிக்கான ஆசையை திருப்தி செய்கிறது. ஆனால் நீங்கள் ஓர் உலகக் கண்காட்சிக்குச் சென்று வந்து, எல்லா விதமான காட்சிப் பொருட்களையும் கண்ட பிறகு, ஒரு சிறிய சந்தை தன் கவர்ச்சியை இழக்கிறது. இது இறைவனுடன் இப்பொழுதே தொடர்புகொள்ளவேண்டிய முக்கியத்துவத்தை, நாம் தாழ்ந்த உலக இன்பங்களுடன் ஒப்பிட்டு விளக்குகிறது. அப்பொழுது உங்கள் ஆசைகள் மிக உயர்வானதாகவும் முன்னேற்றமடைந்த தன்மையுடையதாகவும் இருக்கும். இறைவனுடன் ஒன்றுபடுவதற்கான ஆசை, ஆசைகள் அனைத்திலும் தலைசிறந்தாகும். முக்கியம் குறைந்த ஓர் ஆசை நிறைவேற்றப்பட்டதும் நீங்கள் இன்னுமொன்றைப் பற்றிக்கொள்கின்றீர்கள். ஒருவேளை உங்களுக்கு ஆசைகள் இல்லை யென நீங்கள் நினைக்கலாம். சரி, மக்கள் கடைக்குச் செல்லும்பொழுது என்ன நடக்கிறது என்பதை நான் அடிக்கடி கவனித்துள்ளேன். அவர்களுக்கு வாங்குவதற்காக எந்த குறிப்பிட்ட ஆசையும் இல்லாதிருக்கலாம். ஆனால் திடீரென்று ஏதாவதொன்று அவர்களுடைய கண்களை ஈர்க்கின்றது. “எனக்கு அது கிடைத்தே ஆக வேண்டும்!” என அவர்கள் நினைக்கிறார்கள். அந்தப்பொருள் இராப்பகலாக, அவர்களுடைய மனதில் நிலை கொள்கிறது. முடிவில், பணத்தை கடன் பெற வேண்டியிருந்தாலும்கூட அப்பொருளை வாங்கிவிடுகிறார்கள். சிலகாலம் அதை வைத்திருந்தபின்பு, அதிலுள்ள அவர்களுடைய சந்தோஷம் சலிப்படைகிறது. வேறொன்றை அவர்கள் விரும்புகின்றனர். “என்னிடம் ஆயிரம் டாலர்கள் மட்டும் இருக்குமேயானால் (அல்லது ஒரு மோட்டார் வாகனம் அல்லது ஒரு நீச்சல் குளம்)” என்று சொல்லும் மக்களை நாம் சந்திக்கிறோம். அவர்களுடைய அந்த ஆசை நிறைவேறியதும், அவர்கள் வேறொன்றிற்காக மிகவும் ஆசைப்படுகின்றனர். மானுட ஆசைகள் பூரமணமானவை அல்ல; ஆகவே அவற்றின் நிறைவேற்றும் பூரணமான ஆனந்தத்திற்கு அவர்களை அழைத்துச் செல்கிறது.”

குருதேவர் அருளியுள்ள பரிகாரங்கள்: நன்மையும் தீமையும் மனதில் உருவாக்கப் படுகின்றன.

குருதேவர் அருளுகிறார்: “முடிவான கருத்தில் எல்லாமே மனதில்தான் தொடங்குகின்றன. பாவம், மனதில் உருவாக்கப்படுகிறது. சிறு குழந்தைகள் எந்தக் களங்க உணர்வுமின்றி நிர்வாணமாகத் திரிகிறார்கள். தூய மனம் படைத்தவர்களுக்கு எல்லாமே பரிசுத்தமாகும். ஒழுக்கக் கேடுடையவர்களுக்கு எல்லாமே

102 பாகம்

பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்

மனித வாழ்வு மேம்படுவதற்காக

தீமையாகத்தான்படும். கட்டுப்பாடற்ற மனம், நம் வாழ்க்கையில் பேரழிவை ஏற்படுத்துகிறது. புலன் அடிமைப் பட்ட மனங்கள்தாம், எல்லா போர்கள், கொடுமைகள் மற்றும் அநீதிகள் ஆகிய குற்றங்கள் புரியவை.”

“இறைவன் உங்களை இந்த உணர்ச்சிமயமான தேக உருவத்தில் வைத்ததன் நோக்கமே, நீங்கள் இவ்வுலகத்தில் சிருஷ்டியின் திரைக் காட்சிகளை ரசித்து அவற்றுடன் தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளாமல், உள்முகம் நோக்கும் ஓர் ஆன்மாவாக வாழவேண்டும் என்பதுதான். அப்படித்தான் அனைத்தும் சாதகமாக இருக்கும்பொழுது மட்டுமின்றி, உங்களுடைய இன்னல்களுக்கு இடையிலும்கூட மனக்கட்டுப்பாட்டை நிரூபித்துக் காட்டுபவராக வாழவேண்டும் என இறைவன் விரும்புகிறான். அதைப்பற்றி வெறும் பேச்சளவில் மட்டுமே இல்லாமல் ஸெல்ஃப் ரியலைசேஷன் (யோகதா சத் சங்கம்) உங்களுக்கு இந்த சுய ஆதிக்கத்தையும் போதிக்கிறது. ஜனன மரணக் கூத்து எப்பொழுதும் நடந்துகொண்டே இருக்கிறது. ஆனால் மனிதன் மாறுகின்ற புலன் உணர்வு அனுபவங்களிலிருந்து மேலெழவும், வாழ்க்கையின் நிலையாமையினால் பாதிக்கப்படாமலிருக்கவும் மன வலிமையைப் பெற்றிருக்கிறான். பகவத்கீதை இந்த விடுதலையின் உன்னதமான உறுதியை நமக்கு அளிக்கிறது.

“மனம் சமநிலையில் உறுதிப்படுத்தியவர்களால், இம்மையிலேயே வாழ்க்கையின் சார்புத் தன்மைகள் (ஜனன, மரணம் மற்றும் இன்ப, துன்பம்) வெல்லப்படுகிறது. எனவே அவர்கள் பரம்பொருளிடம் உண்மையிலேயே தோஷமற்ற, பரிபூர்ண, நடு நிலையான பரப்பிரம்மத்தில் வீற்றிருக்கிறார்கள்.”

– (பகவத் கீதை அத் 5 ஸ்லோகம் 19)

பாகம் 101 மற்றும் 102–ல் துன்பங்களுக்கான காரணத்தை குருதேவர் கூறியுள்ளார். அதற்கான பரிகாரத்தையும் அவர் அருளியுள்ளதை கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளன.

பரிகாரம்–1

**எல்லா துன்பங்களுக்கும் காரணமானது அறியாமை.**

குருதேவர் அருளுகிறார்: “எல்லா மதங்கள் மற்றும் நாடுகளின் ஒரு கூட்டுஸ்தாபனம் தேவை. ஆனால் அத்தகைய ஓர் ஒருமை ஒவ்வொரு தனி மனிதனையும் இறைவனின் நேரடித்



குருப்ரியா

தொடர்புக்கு அழைத்துச்செல்லும் அந்தத் தியானத்தில் ஈடுபட்டால்தான் நடக்கும். அவனுடனான தொடர்பு தான் தீர்வாகும். ஒருவன் இறைவனை அறிந்துவிட்டால், மற்றவர்களெல்லாம் தன்னிடமிருந்து வேறுபட்டவர்கள் என்று இனிமேல் நினைக்கமாட்டான். அத்தகைய ஞானம் ஒரு சிலருக்கு மட்டுமல்ல, அனைத்து மனிதர்களுக்கும் வந்தாலொழிய பூமியில் சுதந்திரம் இருக்காது. இங்கு, அமெரிக்காவில்கூட சுதந்திரம் முழுமையாக இல்லை. துன்பம் இன்னும்கூட மிகுதியாக உள்ளது. நாம் ஒவ்வொருவரும் அமைதி மற்றும் ஆனந்தத்தை நமது நாட்டிற்கும் எல்லா மனிதர்களுக்கும் கொண்டுவர கடமைப்பட்டுள்ளோம். ஒருவர் தன்னுடைய சொந்த நாட்டிடம் மட்டுமின்றி மற்ற நாடுகளிடமும், தன்னுடைய சொந்த குடும்பத்திடம் மட்டுமின்றி எல்லா மனித இனத்திடமும் அக்கறை காட்ட வேண்டும். சாதாரண மனிதனுடைய அக்கறை, தான் மற்றும் தனது சுற்றுப்புறங்கள் வரை மட்டுமே உள்ளது. ஆனால் இறைவனை அறிந்தவனோ, முழு உலகத்துடன் தன்னை அடையாளம் காண்கிறான். ஆன்மீகமாக்கப்பட்ட உங்கள் உணர்வுநிலையின் பங்கை சாதாரணமாக எண்ணி விடாதீர்கள். உங்கள் பங்கு மிகவும் பொருள் செறிந்ததாக இருக்கலாம்.”

“இறைவனை அறிவதற்கு நீங்கள் அவனைப்போல் ஆக வேண்டும். நமது அத்துமீறல்கள், இறைவனைப் பற்றிய மறதி, மற்றும் இறைவனிடம் பெரும் அலட்சியம் ஆகியவை இருப்பினும், அவன் நமக்கு உயிர் மற்றும் இந்த உலகத்தில் அந்த உயிரைத் தாங்கும் அனைத்தையும் நமக்குத் தருகிறான். இறைவனைவிட மேலானது எதுவுமில்லை; அவனிடம் காட்டும் அலட்சியம் மிகப்பெரிய பாவம்.”

மேலும் அவர் தொடர்கிறார்: “அவனை அறிவதற்கு தம்மிடம் உள்ள அனைத்தையும் துறக்க விருப்பமில்லாதவர்கள், அவனை அறியமாட்டார்கள். எவரெல்லாம் இறைவனைக் காண விரும்புகின்றனரோ, அவர்களெல்லாம் அவனுக்காக மற்ற எல்லாவற்றையும் துறக்கும் வல்லமை உள்ளவராக இருக்க வேண்டும்.”

பரிகாரம் 2

**தியானம் அறியாமை எனும் மூடுபனியை விலக்குகிறது,**

குருதேவர் அருளுகிறார்: “வியாச முனிவர்

அருளிய பகவத் கீதையில் கண்ணபிரான் உங்களுடைய உள்ளார்ந்த அறிவு, அறியாமையால் மறைக்கப்பட்டிருந்தால், நீங்கள் மாயையில் சிக்குண்டு வாழ்க்கையில் தடுமாறுகிறீர்கள் என விளக்குகிறான். “ஒருவரது ஆற்றலின் அளவைத் தெரிந்துகொள்ளாமல், தனக்கே நேரும் ஆரோக்கியம், செல்வம் மற்றும் செல்வாக்கு ஆகிய இழப்பு மற்றும் மற்றவர்களுக்கு விளையும் தீமை போன்ற விளைவுகளை அலட்சியம் செய்து மாயையினால் தொடங்கப்படும் செயலானது தாமஸ (அறியாமை) வினை எனப்படும்.” (பகவத் கீதை அத்18 ஸ்லோகம் 25) அறியாமை எனும் மூடுபனி தியானத்தால் விலக்கப்படும்பொழுது, நீங்கள் சரியான மார்க்கத்தைக் காண்பீர்கள். இனிமேல், நீங்கள் துன்பப்படமாட்டீர்கள். நீங்கள் நிரந்தரமான நிறைவைக் காண்பீர்கள். உண்மையாகவே ஞானத்திற்குச் சமமானது இவ்வுலகில் எதுவுமில்லை. காலப்போக்கில் யோகத்தில் (தியானத்தில்) வெற்றியடைந்த பக்தன் தன் ஆத்மாவில் இதைத் தானாகவே உணர் கிறான்.“(பகவத் கீதை அத் 4 ஸ்லோகம் 38)

பரிகாரம் 3

## நிறைவேற்றப்படாத ஆசைகளுக்கான பரிகாரம்

குருதேவர் அருளுகிறார்: “உங்களுடைய சகல ஆசைகளையும் இப்பொழுதே பூர்த்தி செய்துவிடுவதோ அல்லது வென்றுவிடுவதோ மேலானது. அவை உடனடியாகவும், எல்லா காலத்திற்குமாகவும் இறைவனின் சன்னிதானம் உன்னத பேரானந்தத்தில் முடிவடைந்துவிடும், ஆனால் அவனைஅறியும் வரை உங்களுடைய வெல்லப்படாத ஆசைகள் உங்களை வேட்டையாட நீடித்திருக்கும்.”

“உங்களுடைய ஆசைகளை முடிவிற்குக் கொண்டு வருவதற்கு இரண்டு மார்க்கங்கள் உள்ளன ஒன்று, பகுத்தறிவு மற்றும் விவேகம் அல்லது ஞானம் மூலம் இறைவன் மட்டுமே நிரந்தரமானதும் கலப்பற்றதுமான ஆனந்தத்தைத் தர வல்லவன் என்று உணர்ந்துகொள்வது; இரண்டாவது அவற்றை நிறைவேற்றுதல். பெரும்பாலானவர்கள் விஷயத்தில் ஆசைகள் ஆழ்மனதின் உள்ளே மறைந்து கிடக்கின்றன. அவை முடிந்துவிட்டன என்று நீங்கள் நினைக் கிறீர்கள். ஆனால் அவை முடியவில்லை. நிச்சயமாக வாழ்க்கை ஒரு பெரிய மர்மம்தான். ஆனால் பகுத்தறிவு என்னும் கத்தியைக்கொண்டு அதை கூறுபோடும்போது, மர்மம் கலைந்து விடுகிறது. ஒவ்வொரு நாளும் சிறிது நேரம் அமைதியாக அமர்ந்து, உங்களை நீங்களே அலசிப் பார்ப்பீர்களானால், நிறைவேற்றப்படாத பல ஆசைகள் உங்களுக்கு இருப்பதை நீங்கள் கண்டுபிடிப்பீர்கள். அவை, நீங்கள் வாழ்நாள் முழுவதும் எடுத்துச் செல்லும் அபாயகரமான கிருமிகளைப் போன்றவை; நீங்கள் எங்கு சென்றாலும் இந்தப் பிறவியிலும் சரி, அல்லது இனிவரும் பிறவிகளிலும் சரி, அவை உங்கள் கூடவே வரும்.”

“எனவே இப்பிறவியிலேயே எல்லா அபாயகர மான ஆசைகளையும் விவேகத்தின் மூலம் அழித்து விட்டு, உங்களுடைய நல்ல ஆசைகளை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்துவதே மிகச்சிறந்த மார்க்கமாகும். தற்கொலை செய்து கொள்வதற்கோ அல்லது ஏதேனும் தீமையைச் செய்வதற்கோ நீங்கள் ஈர்க்கப்பட்டால் அத்தகைய ஆசைகளிலிருந்து இப்பொழுதே விடுபடுங்கள். நீங்கள் இறைவனின் வடிவில் படைக்கப்பட்ட அவனது ஒரு குழந்தை என்று உங்களை நீங்களே நம்பவைத்து, உங்களுடைய மகிழ்ச்சியற்ற மனோபாவங்கள் மற்றும் தேகரீதியான பழக்கங்கள் ஆகிவறற்றைக் கடந்து செல்லுங்கள். அதிகமாக பற்றற்று இருங்கள். இம்முறையில் வெல்லலாம். விவேகத்தின் மூலம் புலன்களை நீங்கள் வெல்ல முடியும். விவேகம்தான் ஆசையை எரிக்கும் நெருப்பு.”

மேலும் அவர் கூறுகிறார்: “ஒருவரது அவசிய மில்லாத தேவையற்ற கழிக்கப்பட்ட சாமான்களை மேல்மாட அறையில் சேர்த்துவைத்து, எப்பொழுதாவது ஒருமுறை வீட்டை நன்றாக துப்புரவாக்குவது பொதுவான ஒரு வழக்கம். இதேபோல் என்றோ ஒரு நாள் உங்களுக்கு பெரும் தொல்லையை தரக்கூடிய தீங்கிழைக்கும் சக்தி வாய்ந்த அனேக ஆசைகள் உங்களுடைய அடித்தள மன அறையில் மறைந்து கிடக்கின்றன. ஆகவே உங்களை நீங்களே ஆராய்வது முக்கியமானதாகும். ஒரு வேளை நீங்கள் வெறுப்பு மிக்க அல்லது சிடுசிடுப்பான அல்லது கோபமுடைய ஒருவராக இருக்கக்கூடும். அப்படியானால் இந்த சேகரித்து வைக்கப்பட்டுள்ள தனிப்பட்ட குணாதிசயங்கள் உங்களுடைய சொந்த கடந்தகால நடத்தையின் விளைவாகும். ‘தேவையற்ற தட்டுமுட்டு சாமான்கள்’ உள்ள உங்கள் மன அறையை சுத்தம் செய்வதற்கு நீங்கள் தீவிரமாக உருப்படியான, ஆக்க பூர்வமான, அன்பான செயலில் ஈடுபடுவேண்டும். சுருங்கச் சொன்னால் இறைவனை அடைய வேண்டுமென்ற மிகப்பயனுள்ள ஒரே ஆசையை நீங்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும். இறைவன் உங்களிடம் உள்ளபொழுது ஏனைய சகல ஆசைகளும் பூரணமாக நிறைவேற்றபடுகின்றன.”

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி) சர்பதிவாளர் (ஓய்வு)
Cell No.9894595909

# எதிர்மறை எண்ணங்களும் பிரம்ம ரகசிய உண்மையும்

நாம் அனைவரும் positive energy, மற்றும் positive எண்ணங்கள் உடன்தான் வாழ விரும்புகிறோம்.

ஆனாலும் சூழ்நிலை காரணமாகவும், சில அனுபவங்கள் காரணமாகவும் negative எண்ணங்கள் நமக்கு உண்டாகிறது.

அப்படி உண்டாகிற எண்ணங்களுக்கு ஏற்பதோதான சினிமா பாடல் ஏதாவது இருந்தால் அதை நாம் பாட ஆரம்பித்து விடுகிறோம்.

இந்த Negative பாடலில் வருகிற கருத்துக்கள் உண்மை என்று கருத ஆரம்பிக்கிரோம். அதனால் பிறரிடம் நமது கருத்தை சொல்லும் போது இந்த Negative thinking songs பாடி இது தான் உலகம் என்று சொல்கிறோம்.

இப்படிதான் நாம் Negative எண்ணங்கள் உடன் வாழ ஆரம்பிக்கிரோம்.

நமது Negative எண்ணங்களுக்கு வலு சேர்பதே இந்த குறிப்பிட்ட சில சினிமா பாடல்கள் தான் ஆகும்.

இந்த பாடல்களால் Negative எண்ணங்கள் இன்னும் வலுபெற்று நமது மனதில் நிரந்தரமாக தங்க ஆரம்பிக்கிறது.

அப்படி தங்கிய எண்ணங்கள் தான் பிற்காலத்தில் அந்த மனிதனை எந்த முயற்சியும் செய்ய விடாமல், எதையும் கத்துக்க விடாமல், எங்கும் செல்ல விடாமல் தடுத்து விடுகிறது.

இப்படி எல்லாம் நடக்க காரணம் என்ன? என்று ஆராய்தோமானால் நம்மை " நமது ஜாதக அமைப்பு கட்டுபடுத்துகிறது" என்ற உண்மை நமக்கு புலனாகிறது.

பொதுவாக எல்லோரும் ராசி, நவாம்சம் கட்டம் தான் பார்பர் . ஆனால் ஜாதகத்தில் இன்னும் நுனுக்கமாக ஆராய்ந்தோமே ஆயின்

ஜாதகத்தில் திரிதாம்சம், சதுர்த்தாம்சம், பஞ்சாம்சம், சஷ்டி யாம்சம், சப்தாம்சம், அஷ்டாம்சம், தசாம்சம், ருத்ராம்சம், போன்ற கட்டங்கள் இருப்பதை அறிய முடியும்.

இதில் "ருத்ராம்சம்" என்ற கட்டம்தான்ஒருவருடைய மரணத்தை பற்றி தகவலை தெரிவிக்கிறது.

மேலும் இந்த ருத்ராம்சத்தில் ஒருவருக்கு "வாழ்தல்" என்ற பிராப்தம் சற்று குறைவாக இருந்தால்; அந்த நபருக்கு தான் Negative எண்ணங்கள் அதிகம் வரும்.

அதாவது ருத்ராம்சத்தில் லக்கினத்திற்கு 6, 8, 12-ம் இடங்களில் ஒரு கிரகம் இருந்தால்; அந்த கிரகத்தின் தசை நடை பெரும்போது அந்த நபருக்கு வாழ பிடிக்காமல் அடிக்கடி Negative thinking songs-ஐ பாட ஆரம்பிப்பார்.

அவரிடம் சென்று யாராவது அறிவுரை கேட்டால்; அவரோ "என்னடா உலகம் இதில் எத்தனை கலகம்..." என்று பாடுவார்.

அவரது மனம் ஆனது ருத்ராம்சத்தில்



## Negative எண்ணங்கள் நமக்கு வர காரணம் என்ன ?




வாழ்தல் என்ற பிராப்தம் குறைவாக இருப்பதால் அதனை ஏற்று அதற்கு ஏதுவான பாடல்களை, வசனங்களை நினைவில் கொள்ளும்படி செய்து விடுகிறது.

அந்த கிரகத்தின் தசா புத்தி நடைபெறும்போது இந்த Negative எண்ணங்கள் அதிகம் வருகின்றன.

மேலும் அந்த கிரகத்தின்ஓரை நேரங்களில் கூட Negative எண்ணங் கள்தான் தோன்றுகிறது.

உதாரணமாக ருத்ராம்சத்தில் லக்கினத்திற்கு 6ம் இடத்தில் செவ் வாய் இருந்தால் அந்த மனிதருக்கு செவ்வாய் ஓரை நடை பெறும் நேரத் தில் Negative எண்ணங்கள்தான் தோன்றும்.


கி.செல்வராஜ்

இந்த உண்மையை ஆன்மீகவாதிகள் ஒவ்வொருவரும் தெரிந்துவைத்துக் கொள்ள வேண்டும்.

எந்த முடிவு எடுப்பதாக இருந்தாலும் ருத்ராம் சத்தில் உள்ள 6, 8, 12 ம் இடங்களில் உள்ள கிரகத்தின் ஓரை நேரம் நடைபெறும் போது முடிவு எடுக்க கூடாது. அப்போது எடுக்கப்படும் முடிவுகள் Negative thinking உடையதாக இருக்கும்.

அந்த கிரகம் ஓரை நேரத்தில் Negative think- ing பாடல்களை கேட்க கூடாது. பாட கூடாது.

ஒருவேலை அந்த கிரகம் ஓரை நேரத்தில் Negative பாடல்களை பாடினால் அதில் உள்ள கருத்துக்கள் ஆனது நமது மூளை முழக்கபரவி மனம் முழக்க நிரம்பி அந்த எண்ணத்தை தனது முடிவாக; தனது கருத்தாக சொல்கிர நிலைக்கு நம்மை மாற்றி விடும்.

அந்த பாடல் வரிகள் ஒரு கவிஞனின் தனிப்பட்ட கருத்து, கவிதை நயத்திற்காக சில வார்த்தைகள் சேர்த்து திட்டம் இட்டு பாடல் புனையப்பட்டது என்ப தையே மறந்து; அந்த பாடல் கருத்தை நமது சொந்த கருத்து போல் சொல்லுவோம். பாடுவோம்.

இந்த நிலைக்கு நாம் மாற கார ணம் ருத்ராம் சத்தில் 6, 8, 12,ம் இடத்தில் உள்ள கிரகத்தின் ஓரை நடைபெறும் நேரத்தில் Neg- ative பாடல்களை கேட்டு இருப்போம். பாடி இருப்போம். இது தான் காரணம் ஆகும்.

இந்த பிரம்ம ரகசிய உண்மையை புரிந்து கொண்ட நாம் இனி என்ன செய்ய வேண்டும் என்றால்?

பாசிட்டிவான பாடல்களை தேர்வு செய்து எழுதிவைத்துக் கொள்ள வேண்டும். அந்த கிரகத்தின் ஓரை நேரத்தில் இந்த positive பாடல் களை தான் பாட வேண்டும்.

எக்காரணம் கொண்டும் Negative thinking songs பாடல்களை கேட்க கூடாது. பாட கூடாது.

இந்த ஒரு விஷயத்தில் மட்டும் நாம் கவன மாக இருந்து விட்டால் போதும். நமக்கு ஏற் பட இருக்கிற பலவிதமான பிரச்சனைகளில் இருந்து எல்லாம் விடுபட்டுவிடலாம். ஒரு வேளை அந்த கிரகம் ஓரை நேரத்தில் Negative பாடல்களை கேட்டால் நமது மனம் அந்த பாடலுடன் ஒன்றிபோய்விடும். நமது மனம் ஆனது அதை நம்பிவிடும். அந்த பாடலில் உள்ள வரிகளுக்கு ஏற்ப நமது ஆழ்மனம் நம்மை தயார்படுத்தும். அதனால் negative thinking songs அரவே பாட கூடாது.

– கி.செல்வராஜ்

தொடர்பு எண்: 6369014582




மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்தும் படிக்கலாம்

# யந்திரம், தாயத்து
## பயன்களும் செய்முறையும்



யந்திரம் என்பது ஒரு தகடு, பிரச்சனையை தீர்க்கும் ஒரு பரிகார முறையாகும்.

ஒரு தகடு எப்படி ஒரு மனிதனின் பிரச்சனையை தீர்க்க முடியும் என்ற கேள்வி தோன்றும். அதை எப்படி செய்கிறார்கள் என்பதில் அதன் விடை இருக்கிறது.

யந்திரம் என்பது பொதுவாக ஒரு மெல்லிய தகடு ஒன்றில் சக்கரம் வரைந்து மந்திர உருவேற்றபடுவதாகும்.

இதில் தங்கம், வெள்ளி, செம்பு, காரீயம், வெள்ளீயம் (ஈயம்) போன்ற தகடுகளை பயன்படுத்தப்படும். இது பொதுவாக சதுரங்க வடிவம் கொண்டே தகடுகளை தான் பயன் படுத்தப்படும். இது எந்த இடத்தில் பயன்படுத்த வேண்டும் என்பதை பொருத்து இதன் அளவு மாறுபடும். அளவு அதிகமாக சக்திகள் அதிக மாகும்.

இந்த யந்திரம் எந்த காரணத்திற்காக செய்யப்படுகிறதே, அந்த காரணத்திற்கான கிரகம், அந்த கிரகத்தின் தேவதை, அந்த கிரகத்தின் அதிதேவதை போன்றவர்களுக்கன குறியீடு, மந்திரம், மூலமந்திரம் அகியவற்றை அந்த தகட்டில் வரைந்து(கிறி) வைக்க வேண்டும். இதில் எழுத பயன்படுத்தும் பொருள்(எழுத்தாணி) மிகமுக்கியமானது. தங்கம், வெள்ளி, செம்பு, பித்தளை, ஈயம், பஞ்சலோகம், அஷ்டலோகம் போன்ற ஆணிகளால் தான் எழுத வேண்டும், இரும்பு ஆணியால் எழுத கூடாது. இப்படி எந்த தேவைக்காக செய்கிறாரே அதற்கான சக்கரத்தை வரைந்து (தகட்டில் ஓட்டை கிழிசல் வரக்கூடாது) பின் அஷ்டகந்தம் பூசபடும் (1.புனுகு, 2.கஸ்தூரி, 3.கோரோசனை, 4.குங்குமப்பூ, 5.அத்தர்/சந்தனம், 6.பச்சைகற்பூரம், 7.ஜவ்வாது, 8.அரகஜா.)

பின் சக்கரத்திற்கு வலுவூட்ட மந்திர உரு வேற்றபடும். இதில்தான் ஒரு யந்திரத்தின் முழு சக்தி அடங்கி இருக்கிறது. மந்திர சக்தி ஏற்பட அந்த தகடுகளில் ஐங்காயம் பூச வேண்டும்( வசம்பு, ஓமம், உள்ளி (ஒரு தலை பூண்டு),



கடுகு, பெருங்காயம்).

பின் நீர், வெற்றிலை பாக்கு, நைவேத்தியம் படைத்து தூபம் தீபம் கற்றி பின் மந்திரங்களை ஜெபிக்க வேண்டும். இதில் எத்தனை உரு ஜெபிக்கின்றோமே அதை பொருத்து அந்த யந்திரத்தின் ஆற்றல் இருக்கும். 9ல்

வருகிற எண்ணிக்கையில் 108 முதல் 1000000000008 வரை எண்ணிலடங்கா வரையும் சொல்லலாம்.

முந்தைய பதிவில் கூறியது போல் கோயில் களில் மூலவர் சிலைக்கு கீழ் யந்திரம் இருக்கும் என்று அதுவும் அப்படி முன்னோர்கள் (சித்தர்கள்/ ரிஷிகள்) அந்த குறிப்பிட்ட கோயில் கட்ட எவ் வளவு ஆண்டுகள் ஆயினாவே அவ்வளவு ஆண்டுகள் அந்த யந்திரத்தை மந்திர உரு ஏற்றப்பட்டு இருக்கும்.



ஆர். சதீஷ்,

இதை பூஜை அறையில் வைத்து வணங்கினால் மிக சிறந்த பலன் கிடைக்கும்.

இதையே மிக மெல்லிய தகட்டில் செய்து உருட்டி தங்கம்/ வெள்ளி குழாயில் அடைத்து உடம்பில் படும் படி கட்டி கொண்டால் அதுதான் தாயத்து. ஆனால் இதை முறையே செய்யாமல் (உரிய தகடு, ஆணி) பலன்கள் தராது, அதேபோல் முறையே உரு ஏற்ற வில்லை என்றாலும் பலன் தராது அல்லது சில நாட்கள் மட்டுமே பலன் தரும் (தொலைக்காட்சியில் விளம்பரம் செய்து விற்பனை செய்யும் பல இப்படி தான் இரும்பு ஆணி (machine) யில் பல லட்சம் செய்து எதாவது ஒரு ஹோமத்தில் வைத்து ஒரு நாள் மட்டும் பூஜை செய்து விற்கும் யந்திரத்தில் ஒரு பயனும் இல்லை.

எந்த காரியத்துக்காக செய்கி றாரே, அதை முறையாக செய்த ஒரு யந்திரத்தை பயன்படுத்தி நிச்சயம் நல்ல சுப பலன்கள் அடையாளம்.

அனைத்து வகை தாயத்து யந்திரங்கள் நன்மைக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டுமே யொழிய எக்காரணம் கொண்டும் தீமைக்கு இடம் கொடுக்க கூடாது.

– ஆர். சதீஷ், கடலூர்
aboorvam divine centre
போன்: 9655714283




# சிவராத்திரியில் மட்டும் வெளியில் தெரியும் சங்கு

Mountain Mandir பாகல்பூரில் இருந்து 45 கி.மீ தூரத்தில் உள்ள பாங்கா மாவட்டத்தில் இந்த சங்கு இருக்கிறது.

கடலை கடையும் போது கிடைத்த விஷத்தை இந்த பாஞ்சன்ய சங்கில்தான் சிவபெருமான் குடித்தாக கூறப்படுகிறது.

இந்த சங்கானது சிவராத்திரிக்கு ஒருநாள் முன்பு காணப்படும். மீதி 364 நாட்கள் 70 லிருந்து 80 அடி தண்ணீருக்குள் இருக்கும். இந்த ஒரு நாள் மட்டும் தண்ணீர் குறைந்து சங்கு வெளியே தெரியும் அடுத்த நாள் தண்ணீர் சேர்த்து சங்கு மறைந்துவிடும். என்கின்றனர்.

# உன்னை நீ நேசி

உன்னை நேசி என்கிறார் புத்தர்.இது ஒரு புரட்சிகர மான மாற்றத்துக்குஅடிப்படையாகப் போகிறது. உன்னை நேசிப்பதில் எந்தபயமும் வேண்டாம். முழுக்க நேசி. உனக்கே ஆச்சர்யமாக இருக்கும். சுய நிந்தனை, சுய அவமதிப்பு ஆகியவற்றை கழித்துக்கட்டும் அந்த நாள். உன்னை நீயே மதிப்புள்ளவனாக கருதும் அந்த நாள், உன்னை கடவுள் நேசிக்கிறார் என்பதை புரிந்து கொள்ளும் அந்த நாள் ஒரு மாபெரும் வரப் பிரசாதமாக இருக்கப் போகிறது. அந்த நாள் முதல் மற்றவரை அவரவர் எப்படி இருக்கிறார்களோ அப்படியே பார்க்க முடியும் உன் மனதில் அன்பும் கனிவும் பெருக்கெடுக்கும். அது பிறருக்காக வேடம் போடும் கனிவல்ல. வெகு இயல்பாக, ஊற்று நீராக பிரவகிக்கும் கனிவு.

உன் மனம் சதா எதையாவது முன்னிறுத்திக் கொண்டே இருக்கிறது. தன்னை முன்னிறுத்திக் கொண்டிருக்கிறது. உன் மனம் எதார்த்தத்தில் குறுக்கிட்டுக் கொண்டே இருக்கிறது. அதற்கு ஒரு நிறத்தை கற்பித்து வைக்கிறது. அதனுடையதல்லாத ஒரு தோற்றத்தையும் வடிவத்தையும் கற்பித்து காண வைக்கிறது. எதையும் அதுதுவாகப் பார்க்க உன் மனம் உன்னை விடுவதே இல்லை. உன் மனம் எதை விரும்புகிறதோ அதையே உன்னை பார்க்க வைக்கிறது. அகந்தை என்னும் இருட்டு அண்டவே முடியாத அளவுக்கு பிரகாசமானது அன்பு. மற்றவர்கள் மீது மட் டுமே அன்போடு இருக்கும்வரை, உன் அன்பு மற்றவரை நோக்கியே இருக்கும் வரை நீ இருட்டில்தான் உழன்று கொண்டிருப்பாய்.

உன் ஒளியை முதலில் உன்னைநோக்கி திருப்பு. உனக்கு நீயே ஒரு விளக்காகிவிடு. அந்த ஒளி உன் அக இருட்டை களையட்டும். உன் அகத்தகத்துப் பல வீனங்களை விரட்டி விடட்டும். அன்பு உன்னை ஒரு மாபெரும் சக்தியாக மாற்றட்டும். ஓர் ஆன்ம சக்தியாக... ஆன்மா சக்தியுடையதாகி போகும் போது நீ இறக்கப் போவதில்லை என்பதை புரிந்து கொள்வாய்.

நீ உன்னை சிரஞ்சீவி என்பதை தெரிந்து கொள்வாய். நீ நித்தியமானவன் என்பதை அறிந்து கொள்வாய்...!

– ஓஷோ



# புத்தி ஒரு "பஸ் ஸ்டாப்" புத்தியில் பலபேரை ஏற்றிக் கொள்ளாதே அறிவை மட்டும் ஏற்றிக் கொள்

ஆண்டவனைப் பற்றிப் பேசு. அவனுக்கு உலகெங்கும் பக்தர்களை உருவாக்கிவிடு.

❖❖❖

சிந்திக்கச் சிந்திக்க புதிய புத்தியில் சிந்தனைகள் ஊறிக் கொண்டே இருக்கும்.

❖❖❖

வெண்திரை இருந்தால் தான் சினிமா படங்கள் கண்களுக்குத் தெரியும். அதுபோல் "பக்தி ஒன்றினால் தான்" கடவுளைப் பார்க்க முடியும்.

❖❖❖

நீ மூச்சு விட்டுக்கொண்டு இருக்கும் வரை, வேறு எதற்கும் குழம்பாமல், சந்தேகப்படாமல் சமுதாயத்திற்கு உழைத்துக் கொண்டே இரு.



❖❖❖

நீ மூச்சுவிடுவது உனக்கு மிகமிக முக்கியம். அதுபோல் உனது ஆண்டவனுக்கு உனக்கு அனுக்கிரகம் செய்வது மிக மிக முக்கியம்.

❖❖❖

புத்தி ஒரு "பஸ் ஸ்டாப்". உனது புத்தியில் பலபேரை ஏற்றிக் கொள்ளாதே. அறிவை மட்டும் ஏற்றிக் கொள்.

❖❖❖

தீவிர பக்திக்குப் புதிய காரணம் கண்டுபிடித்து ஆண்டவனிடம் சொல். இறைவன் உன்னைக் கண்டு மகிழ்வான்.

❖❖❖

புத்தி இல்லாத மனிதர்கள் பெருகப் பெருக உலகம் துன்பப்படுகிறது. இதன் காரணமாய் உலகம் மேதைகளைப் பெற்றெடுத்துவிடுகிறது.

❖❖❖

தெருவிளக்கு அணைந்து விட்டால் சாலையில் நடப்போர் கஷ்டப்படுவது போல், பக்தர்கள் இல்லையானால் சமுதாயத்தில் ஆண்டவனே கஷ்டப்படுகிறான்.

❖❖❖

சிந்தனைக்கும் புத்திக்கும் உள்ள ரகசிய ஒப்பந்தம் புத்திக்குப் புலப்பட்டுவிட்டால், மனிதன் அடுத்த நிமிடமே மேதை தான்.

❖❖❖

மனிதனுக்கும் கடவுளுக்கும் இருப்பது பக்தி ஒப்பந்தமே. இதை முறித்துக் கொண்டால் மனிதனுக்குத் துன்பமே.

❖❖❖

www.aanmeegamalar.com



ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
நடராஜன்
செல்: 9444228203
♦♦♦
முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162192
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி, தன்ஷிகா
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.

ஆசிரியர் குழுவில்
நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்ளுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
9444228203

மனிதர்களே சிந்தனை வரும்பொழுது சிந்தியுங்கள். அது இல்லாத பொழுது பெரிய மனிதனாய் இருங்கள்.

❖❖❖

பக்தி இருக்கும்பொழுது ஆண்டவனை நினை. அது இல்லாத சமயத்தில் ஆண்டவனை நினைப்பதற்காக, ஆண்டவனையே வழிபட்டுக் கொண்டிரு.

❖❖❖

காற்றடிக்கும் பொழுது காற்றாடி பறக்கும். அது இல்லாத பொழுது காற்றாடி காற்றுக்காகவே நின்று கொண்டிருக்கும்.

❖❖❖

மாட்டு வண்டிக்கும், குதிரை வண்டிக்கும் “கடையாணியே” வாழ்க்கை. இதுபோல் எங்கும் இருக்கின்ற மக்களுக்கு புத்தியே பெருமிதம்.

❖❖❖

குப்பை மேட்டின் மீது சேவல் ஏறி நின்று கூவுவதைப் போல், நீ எதை மக்களின் முன் எடுத்துப் போட்டு பிரச்சாரம் செய்யப் போகிறாய்? உடனே விடை தெரிந்தால், அதுவே கடவுளைப் பற்றிய ஞானம்.

❖❖❖

புல்லாங்குழலில் துவாரங்களே சங்கீதம், இசை எல்லாம். இதேபோல் உனது உடலில் உள்ள நவத்துவாரங்களே உனக்கு ஆண்டவனைக் காட்டுகின்றது.

❖❖❖

மனிதன் சமுதாயத்திற்கு வெள்ளையடிப்பான் என்று நான் சொல்வது, அவன் புத்தியைக் கொண்டு அறியாமையை விரட்டுகிறான் என்று பொருள்.

❖❖❖

இந்தப் படம் “கறுப்புவெள்ளை”, அந்தப் படம் “வண்ணப் படம்“ என்பார்கள். அதுபோல் அவர் சிவபெருமானை உணர்ந்தவர், இவர் திருமாலை உணர்ந்தவர் என்று நீங்கள் பெயரெடுங்கள். சமுதாயம் அழகாகிவிடும்.

❖❖❖

தென்னம் பிள்ளைகள், பனம் பிள்ளைகளால் விவசாயிக்கு லாபம். புத்தியில்லாப் பிள்ளைகளால், புத்தனுக்கு நஷ்டமில்லை; நாட்டிற்கே நஷ்டம்.

❖❖❖

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

www.aanmeegamalar.com

# முருகன்

## 16 வகை கோலங்கள்

முருகன் அவன் அழகன். பன்னிரு தோளும் பவளச் செவ்வாயும் உடையவன். ஆறுமுகன். முருகா என்று கூப்பிட்டு முறையிட்டப் பேருக்கு முற்றிய வினைகள் தீர்ப்பவன். கந்தன் அவன் கருணை மிக்கவன். தைப் பூசத் திருநாளில் அலகு குத்தி காவடி எடுத்து தன்னைப் பார்க்க வருபவர்களின் முன்வினையை தீர்ப்பவன். ஆறுமுகப் பெருமானின் 16 வகை கோலங்கள் பற்றி இந்தப் பதிவில் தெரிந்துக் கொள்ளலாம்.

### 1.ஞானசக்திதரர்:

முருகன் என்றால் அழகு மட்டுமல்ல. அவன் கைத்திருவேல் ஞானத்தின் ஸ்வரூபம். ஒரு செயலை தொடங்கி அது வெற்றிப் பெற இந்த கோலத்தில் உள்ள முருகனை வழிபடலாம்.

நினைத்த காரியங்கள் வெற்றியுடன் முடியும். ஞானசக்திதரர் கோலத்தில் உள்ள முருகரை தரிசிக்க வேண்டுமானால், திருத்தணிகைசெல்ல வேண்டும். திருத்தணிகையில் எழுந்தருளியிருக் கும் மூலவர் திருவடிவம் ` ஞானசக்திதரர்' திருக் கோலமாகும்.

### 2. கந்தசாமி:

பழனிமலையில் கோலோச்சும் தண்டாயுதபானி ஆண்டவரே கந்தசாமி திருக்கொலத்தில் இருப் பவர். இவரை வழிபட்டால் சகல காரியங் களும் சித்தியாகும்.

### 3. ஆறுமுக தேவசேனாபதி:

குமரனை தேவ சேனாதிபதி என்றும் அழைப்பார்கள். தேவர்களுக்காக படையை முன்னின்று நடத்தி அசுரர்களை சம்காரம் செய்தவர். மங்களகரமான வாழ்வு வேண்டுவோர் இவரை வழிபட, பலன் கிடைக்கும். ஆறுமுக தேவசேனாபதியின் திருவுருவத்தை சென்னி மலையாண்டவர் திருக்கோயிலில் கர்ப்பக்கிரக மாடம் ஒன்றில் தரிசிக்கலாம்.

### 4. சுப்பிரமணியர்:

நாகை மாவட்டத்திலுள்ள திருவிடைகழி



முருகன் கோயில் மூலவரே சுப்பிரமண்யர் ஆவார். சுப்பிரமண்யர் தன்னை வழிபடும் பக்தர் களின் வினைகளை நீக்கி ஆனந்தப் பேற்றினை அளிக்கக் கூடியவர்.

### 5. கஜவாகனர்:

யானை மீதிருக்கும் முருகப் பெருமானை இதுவரை பார்த்தது உண்டா ? திருமருகல், மேல்பாடி , சிதம்பரம் நடராஜர் கோயில் கீழைக் கோபுரம் ஆகிய இடங்களில் யானை மீதிருக்கும் கஜவாகனர் திருவுருவத்தைப் பார்க்கலாம். இவர்

தன்னை வழிபடுவோரின் துன்பங்களை விலக்கி காத்தருளுபவர்.

**6. சரவணபவர்:**

சென்னிமலை, திருப்போரூர் ஆகிய இடங்களில் சரவணபவரின் திருவடிவத்தைப் பார்க்கலாம். இவரை வழிபடும் அடியவர்களுக்கு மங்கலம் , ஒலி , கொடை , சாத்வீகம் , வீரம் முதலிய குணங்களை அளிக்க வல்லவர்.

**7. கார்த்திகேயர்:**

கேட்டவுடன் சகல சவுபாக்கியங்களும் தரும் கார்த்திகேயரின் திருவுருவம் கும்பகோணத்தில் உள்ள கும்பேஸ்வரர் கோயிலிலும் , தாராசுரம் ஐராவதீச்வரர் கோயிலிலும் காணலாம். இவருக்கான சிறப்பான நாளான கார்த்திகை நட்சத்திர நாட்களில் இவரை வழிபடுவது கூடுதல் சிறப்பு.

**8. குமாரசாமி:**

முருகனின் குமாரசாமி கோலத்தை வழிபடுபவர்களுக்கு ஆணவம் அடியோடு நீங்கும். நாகர்கோவில் அருகில் இருக்கும் குமாரகோவிலில் இவரது திருவடிவம் காணலாம். கங்கை கொண்ட சோழபுரத்தில் இவருக்குப் பஞ்சலோக விக்கிரகம் இருப்பது குறிப்பிடத்தக்கது.

**9. சண்முகர்:**

சிவனையும் சக்தியையும் ஒரு சேர வழிபட்ட பலனை அடைய விரும்புபவர்கள் சண்முகரை வழிபடலாம். திருச்செந்தூரில் உள்ள முருகனின் அருட்கோலம் சண்முகர் திருவடிவமாகும்.

**10. தாரகாரி:**

விராலி மலையில் உள்ள முருகன் கோயிலில் அருள்பாலிப்பவரே தாரகாரி. ' தாரகாசுரன் ' என்னும் அசுரனை அழித்ததால் இவருக்கு தாரகாரி என்ற பெயர் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. அழியும் இந்த உலக மாயைகளில் இருந்து விடுபட இவரை வணங்கினால் போதும்.

**11. சேனானி:**

பகை அழியவும், பொறாமை நீங்கவும், போட்டிகளில் வெற்றிகிடைக்கவும், சேனானி என்னும் முருகனின் அருட்கோலத்தை தரிசித்தால் போதும். தேவிகாபுரம் ஆலயத்தில் சேனானி திருவுருவம் இருக்கிறது.

**12. பிரம்மசாஸ்தா:**

இவரை வழிபட்டால் எல்லா வகைவித்தைகளிலும் தேர்ச்சி பெறலாம். சகலவித கலையறிவும் அதிகரிக்கும். கல்வியில் தேர்ச்சி கிட்டும். காஞ்சிபுரத்தில் உள்ள குமரக்கோட்டம் ஆனூர், பாகசாலை, சிறுவாபுரி ஆகிய இடங்களில் பிரம்மசாஸ்தா திருக்கோலம் உள்ளது.

**13. வள்ளிகல்யாணசுந்தரர்:**

பெயருக்கு ஏற்றார் போல், திருப்போரூர் முருகன் கோயில் தூண் ஒன்றில் காட்சித் தரும் வள்ளிக் கல்யாண சுந்தரரை வழிபட்டால், திருமணத்தடைகள் விரைவில் அகலும். கன்னிப் பெண்களுக்குக் மனம் போல் மாங்கல்ய பாக்கியம் கிடைக்கும்.

**14. பாலசுவாமி:**

உடல் ஊனங்களையும், குறைகளையும் அகற்றும் தெய்வம் பாலசுவாமி. இவரை வழிபடுபவர்களுக்கு உடல் நலம் கிடைக்கும். திருச்செந்தூர், ஆண்டாள் கும்பம் கோயில்களில் பாலசுவாமி திருவுருவம் இருக்கிறது.

**15. சிரவுபஞ்சபேதனர்:**

இவரை வழிபட்டால் துன்பங்கள் விலகும். மனச்சஞ்சலம் அகலும். திருநெல்லிக்கா, திருக்குறங்குடி, திருநளி பள்ளி ஆகிய இடங்களில் இவரது திருவுருவம் உண்டு.

**16. சிகிவாகனர்:**

மயில் மீது அமர்ந்திருக்கும் முருகனின் அருட்கோலத்தை , நாம் செல்லும் ஆலயம் பலவற்றில் பார்த்திருப்போம். தன்னை வழிபடுபவர்களுக்கு இன்பமான வாழ்வு அளிப்பவர்.

– முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா செல்: 9994162192

ஆன்மிகம் தத்துவம் உடல்நலம் பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# ஒவ்வொரு ராசிக்குரிய முருகன் கோயில்கள்!!






எல்லா முருகன் கோவிலும் சிறப்புதான்...

முருகன் என்றாலே சிறப்புதானே...

முருகன் கோவில்களில் முதன்மையான கோயில்.. மயிலம் சுப்பிரமணியர் கோயில் செவ்வாயின் ஆதிக்கம் அதிகம் உள்ள முருகன் கோயில் இது. திண்டிவனம் அருகே உள்ளது இந்த கோயில். ஒரு முறை சென்று வாருங்கள்... வாழ்வில் நல்ல மாற்றத்தை உணர்வீர்கள்..

மேலும் செவ்வாய் ஆகர்ஷனம் அதிகம் உள்ள கோயில்கள் பற்றின விவரங்கள் கீழே...

இதன் விசேஷம் என்னவென்றால் இதன் அருகே உள்ள மண் எல்லாம் சிவப்பு நிறமாகத் தான் இருக்கும்.

ராசிப்படி முருகன் கோயில்கள்..

கொடைக்கானல் – தாண்டுகுடி: மேஷம்

சுவாமிமலை: ரிஷபம்

செவலூர் பூமினாதேஸ்வரர்: மிதுனம்



அழகுராஜா

பழனி முருகன்: கடகம்

திருபரங்குன்றம் முருகன்: சிம்மம்

திருசெந்தூர் முருகன்: கன்னி

வைதீஸ்வரன் கோயில்

முத்துக்குமார சுவாமி: துலாம்

மன்னச்சநல்லூர் பூமி நாதேஸ்வரர்: விருச்சிகம்

திருத்தணி: தனுசு

வயலூர் முருகன்: மகரம்

ஓரக்காட்டு பேட்டை குணம் தந்த நாதர் செங்கல்பட்டு அருகில்: கும்பம்

திருவக்கரை வக்ர பத்ர காளி: மீனம்

குறிப்பிட்ட கோயில்களில் உள்ள முருகனை, குறிப்பிட்ட ராசிகாரகள் வழிபட நன்மை பல நிச்சயம் உண்டு.

– முதன்மை செய்தியாளர்: அழகுராஜா செல்: 9994162192






# இராசிக்குரிய அபிஷேகங்கள்

**மேஷம்:**

வெல்லம் கலந்த நீர் கொண்டு அபிஷேகம் செய்ய வேண்டும்.

**ரிஷபம்:**

இந்த ராசிக்காரர்கள் தயிர் கொண்டு அபிஷேகம் செய்தால் பணப் பிரச்சனைகள நீங்கும்.

**மிதுனம்:**

சிவ லிங்கத்திற்கு கரும்பு சாறு கொண்டு அபிஷேகம் செய்ய வேண்டும்.

**கடகம்:**

சர்க்கரை சேர்த்த பால் கொண்டு சிவனுக்கு அபிஷேகம் செய்ய வேண்டும். மந்தாரைப் பூ கொண்டு அர்ச்சனை செய்ய வேண்டும்.

**சிம்மம்:**

பால் கொண்டு சிவனுக்கு அபிஷேகம் செய்ய வேண்டும்.

**கன்னி:**

இந்த ராசிக்காரர்கள் பாங் பால் நீரால் சிவனுக்கு அபிஷேகம் செய்ய வேண்டும்.

**துலாம்:**

பசும் பாலால் இந்த ராசிக்காரர்கள் சிவனுக்கு அபிஷேகம் செய்ய வேண்டும்.

**விருச்சிகம்:**

இந்த ராசிக்காரர்கள் தேன் அல்லது சர்க்கரை கலந்த நீரால் அபிஷேகம் செய்யலாம்.

**தனுசு:**

இந்த ராசிக்காரர்கள் குங்குமப்பூ கலந்த பாலால் அபிஷேகம் செய்ய வேண்டும்.

**மகரம்:**

இந்த ராசிக்காரர்கள் சிவனுக்கு நல்லெண்ணெய் அபிஷேகம் செய்து வில்வம் பழத்தை படைக்க வேண்டும்.

**கும்பம்:**

இளநீர் அல்லது கடுகு எண்ணெயால் இந்த ராசிகாரர்கள் சிவனுக்கு அபிஷகம் செய்ய வேண்டும்.

**மீனம்:**

குங்குமப்பூ பாலால் இந்த ராசிக்காரர்கள் சிவனுக்கு பால் அபிஷேகம் செய்ய வேண்டும்.

இதுவரை
வெளிவந்த
அனைத்து
இதழ்களையும்
எந்தவித
கட்டணமின்றி
முற்றிலும்
இலவசமாக
படிக்க













**aanmeegamalar.com**

இணையதளத்தை

பார்க்கவும்









# சிவயோகிகளின் தலைவன்

# கருவூரார்

## உலகுக்கு அறிவித்த போகர்
## காரணமாக இருந்த பிரகதீஸ்வரர்

மாமன்னன் ராஜ ராஜ சோழனுக்கு ஆலோசனை கூறும் குருவாக இருந்துள்ளார் கருவூரார் என அழைக்கப்படும் கருவூர் சித்தர். இவர் கரூர் பசுபதீஸ்வரர் ஆலயத்தில் சமாதிபூண்டும் தஞ்சைப் பெருவுடையார் கோவில் பிரகாரத்தில் தனிக்கோவில் கொண்டும் அருளாட்சி செய்து வருகிறார். இவரது அறிவுரைபடியே உலகம் போற்றும் இந்த கோவிலை கட்டியுள்ளார் ராஜ ராஜ சோழன். வியாழக்கிழமைகளில் இவரை வழிபட்டு வருபவர்களுக்கு நினைத்தது நிறைவேறும் அனைத்து வளங்களும் கிடைக்கும்.

தஞ்சை பெரியகோவில் கருவறையில் உள்ள சிவலிங்கம் உலகிலேயே மிக பெரியதாகும். ஆறு அடி உயரமும், 54 அடி சுற்றளவும் கொண்ட ஆவுடையார், 13 அடி உயரமும், 23 அரை அடிசுற்றளவும் உள்ள லிங்கம் எனத் தனிதனித் கருங்களனால் செதுக்கப்பட்டு இணைக் கப்பட்டுள்ளது. சிவலிங்கத்தை சுற்றி வர இடமும் கருவறையை சுற்றி அமைக்கப்பட்டுள்ளது. நமது பார்வையில்தென்படுவது சிவலிங்கத்தின் மூன்றில் ஒரு பங்கு மட்டுமே. அபிஷேக ஆராதனைகளுக்குவசதி யாக இரு புறங்களிலும் படிகள் அமைக்கப்பட்டு உள் ளன. தஞ்சை கோயிலின் சிவலிங்க வழிபாடு மகுடாகம அடிப்படையில் செய்யப்படுகிறது.



www.aanmeegamalar.com

உச்சி காலம், சாயரட்சை, அர்த்த ஜாமம் என நான்கு கால பூஜைகள் நடைபெற்று வருகின்றன.

தஞ்சை பெரியகோயில் கட்டுமானப் பணியின் போது கரு வறையில் லிங்கப் பிரதிஷ்டை செய்யும் போது ஆவுடையாரில் லிங்கத்தை நிறுவி மருந்து சாத்தினர். மருந்து இளகியபடியே இருந்ததால் லிங்கம் இறுகவில்லை. ஆதீனங்களைஅழைத்து மருந்து சாத்தியும் கைகூடாமல் போனதால் ராஜராஜ சோழனுக்கு என்ன செய்வது என்று தெரியாமல் வேதனைப்பட்டார். அப்போது சித்தர் கருவூரார் வந்தாலன்றி, மாமன்னர் வெற்றியடைய முடியாது என்று அசரீரி வாக்குகேட்டது.

இதைக்கேட்ட மன்னர் மகிழ்ச்சியடைந்தார். கருவூரார் எங்குள்ளார்? அவரை எப்படி தேடிக் கண்டுப் பிடிப்பது எனக் கேட்டார். அப்போது போகர் சித்தர், கருவூராரை அழைத்து வருவதாக கூறினார். ஒரு காகத்தின் காலில், ஓலையைக் கட்டி பறக்கவிட்டார். சிறிது நேரத்தில் கருவூரார் தஞ்சை கோயிலுக்கு வந்து விட்டார். சித்தர்கள் காற்றின்



கீதா–ராஜன்

மூலம் ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்தை அடைவார்கள் எனவேதான் நினைத்த நேரத்தில் ஓர் இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு செல்வார்கள்.

கருவூரார் அங்கிருந்த போகரிடம், எல்லா வல்லமையும் பெற்ற தாங்களே இதைச் செய்திருக்கலாமே அடியேனை அழைத்தது எதற்காக?" என்று கேட்டார்.

அதற்கு போகர், நீர் சிவயோகிகளின் தலைவர் என்பதை உலகுக்கு அறிவிக்கவே இவ்வாறு செய்தேன் என்று கூறினார் மாமன்னர் ராஜராஜன் போகரையும், கருவூராரையும் வணங்கி சிவலிங்கப்பிரதிஷ்டைக்கு உதவுமாறு வேண்டினார். கருவூராரும் சிவ சிந்தனையுடன் கைகளால் அழுத்திப் பிடிக்க மருந்து இறுகிப் பிடித்துக் கொண்டது. மன்னரும் கருவூராரின் செயலுக்கு நன்றி செலுத்தும் விதமாக அவருக்கு மூலஸ்தானத்திற்கு பின்புறம் ஒரு சன்னதியை ஏற்படுத்தினார்.

மற்றும் ஆகமங்களைக் கற்று தேர்ச்சி பெற்ற கருவூரார், யோக சித்திகள் கைவரப் பெற்றவர். போகரை குருவாகக் கொண்டு உபதேசம் பெற்றவர்.

எண்ணற்ற பல அற்புதங்களை இவர் செய்திருக்கிறார். கொங்கு தேசம், வடநாடு, தொண்டைநாடு, நடுநாடு முதலிய இடங்களில் உள்ள தலங்களைத் தரிசித்துக் கொண்டு, தென்பாண்டிநாட்டுத் திருப்புடைமருதூர் சென்று, இறைவனிடம் இவர் திருவடிதீட்சை பெற்றார். இவர் திருநெல்வேலி நெல்லையப்பர் கோவிலுக்கு சென்றார். அப்போது நிவேதன காலம். இவர், இறைவனை "நெல்லையப்பா" என்று மூன்று முறை அழைத்தும் இறைவனின் தரிசனம் கிடைக்கவில்லை. “அட, இங்கே நெல்லையப்பன் இல்லையாப்பா?” என்று இவர் நகைப்புடன் கூறவும், சுற்றி எருக்கும், வேண்டாத புல் பூண்டுகளும் முளைத்துக் கோவிலை மறைத்து நின்றன.





அங்கிருந்து திரும்பி பாராமல் நடந்தார் சித்தர், சித்தரின் கோபம் சிவனையும் நடுங்க வைத்தது. கருவூரார் மானூரை

www.aanmeegamalar.com

அடையும்போது நெல்லையப்பர் வழிமறித்து, சித்தரை சமரசம் செய்து நெல்லைக்கு அழைத்தார். கருவூரார் சமாதானமாகி நெல்லை நோக்கி நடக்கலானார். அவர் எடுத்துவைத்த ஒவ்வொரு அடிக்கும் ஒரு பொற்காசு என்று கணக்கிட்டு இறைவன் வழங்கியதாக கூறப்படுகிறது.

## அற்புத வைத்தியத்தை உலகுக்கு உணர்த்தியவர்

கருவூரார் போகரின் சீடராவார். கருவூரைச் சேர்ந்தவர் என்பதால் கருவூரார் என்ற பெயர் இவருக்கு வந்தது. சைவ சமயத்தைக் கடைபிடித்த இவர் ஞான நூல்களை ஆராய்ந்தவர். சிவ யோக சித்தி அடைந்தவர். இவரது காலம் கி.பி. 11 ம் நூற்றாண்டு. கார்த்திகை திங்கள் மிருகசீரிடம் அன்று பூச நாளில் ஆரம்பித்து வேப்பமரக் கொழுந்தைக் கிள்ளி இருபத்தேழு நாட்கள் சாப்பிட்டால்.., பாம்பு கடித்தாலும் விஷம் ஏறாது. ஒரு மாதம் சாப்பிட்டால் குஷ்ட நோய் விலகும். கொழுந்தை நிழலில் உலர்த்திப் பொடி செய்து மூன்று விரல்களால் எடுக்கும் அளவு பொடியை தேனில் குழைத்துத் சாப்பிட்டு வந்தால் நரை, திரை, மாறும் என்கிற வேம்பின் மகத்துவதை முதன் முதலாகச் சொன்னவர் இவர்.

வாத காவியம், வைத்தியம், யோக ஞானம், பல திரட்டு, குருநூல் சூத்திரம், பூரண ஞானம், மெய்ச் சுருக்கம், சிவஞான போதம், கற்பவிதி, மூப்பு சூத்திரம், பூஜா விதி போன்ற பல தமிழ் நூல்களை நமக்கு வழங்கியுள்ளார். முனிவர் களால் ஞானப் பாலூட்டப்பட்டு வளர்ந்தவர் கருவூரார்.

தேவதச்சன் விஸ்வகர்மாவின் மகனான மயன் குலத்தில் பிறந்தவர்.கருவூராரின் தாய் தந்தை ஊர் ஊராகச் சென்று ஆங்காங்குள்ள கோயில்களில் விக்கிரங்கள் செய்து கொடுத்து வாழ்க்கை நடத்தி வந்தனர்.







அதில்கிடைத்த வருவாய் கொண்டு அவர்கள் முனிவர்களுக்கும்,சித்தர்களுக்கும் வேண்டிய பொருட்களை கொடுப்பது வழக்கம். சிறு வயதிலேயே மானுட வாழ்வின் நிலையாமையை உணர்ந்தவர். வசியம், மோகனம், தம்பனம், உச்சாடனம் ஆகர்ஷணம், வித்து வேஷணம், பேதனம், மாரணம் எனும் அட்டகர்ம மந்திரங்கள் கருவூராருக்கு அத்துப்படியாகியது.

தாமரைக்காய் மாலையணிந்து, புலித்தோலால் செய்யப்பட்ட ஆசனத்தினை ஆலமரப்பலகை மீது விரித்து தென் மேற்குச் திசையில் அமர்ந்து ‘நவசிவாயம்’ எனும் தம்பனத்துக்குரிய மந்திரம் அந்த வயதிலேயே அவருக்கு வசியமானது. அறிந்த மந்திரம் யாவற்றையும் ஏழை, எளிய மக்கள் குறை தீர்க்கவே கையாண்டு வந்தார். சிவாலயங்களில் சிவலிங்கத்தை தங்கத்தால் உருவாக்குவதும் பாசுரம் பாடி பக்தி நெறி வளர்ப்பதுமாக ஊரெங்கும் அலைந்து திரிந்தார். சாதி,குலம், நீத்துச் சிவத்தல யாத்திரை செய்து திருவிசைப்பா பதிகங்கள் பாடி வந்தார். சாதி சம்பிரதாயங்களை புறக்கணித்தார்.

– கீதாராஜன்:

செல்: 9444229203


www.aanmeegamalar.com

# முருகனும் 12 கைகளும்

முருகனின் பன்னிருகரங்களில் இரு கரங்கள் தேவர்களையும், முனிவர்களையும் காக்கின்றன.

மூன்றாவது கை அங்குசத்தினைச் செலுத்து கிறது.

மற்றொரு கை ஆடை உடுத்திய தொடையில் பதிந்திருக்கிறது.

ஐந்து மற்றும் ஆறாவது கைகள் வேலைச்சுழற்றுகின்றன.

ஏழாவது கை முனிவர்களுக்கு அரும் பொருளை உணர்த்துகிறது.

எட்டாவது கை மார்பில் உள்ள மாலையோடு விளங்குகிறது.

ஒன்பதாவது கை வளைகளோடு சுழன்று வேள்வியை ஏற்கிறது.

பத்தாவது கை மணியை ஒலிக்கிறது.

பதினோராவது கை மழையை அருள்கிறது.

பன்னிரண்டாவது கை மணமாலை சூட்டுகிறது.

# பழநி முருகனை காக்கும் பங்குனி உத்திர விழா

அறுபடை வீடுகளில் மூன்றாம் படைவீடான திருவாவினன்குடி அமைந்து இருக்கும் பழனியில் பங்குனி மாதம் உத்தரம் நட்சத்திர திதியில் நடைபெறும் விழா பங்குனி உத்தரம் ஆகும். அனைத்து அறுபடைவீடுகளில் பங்குனி உத்தரம் விழா நடைபெற்றாலும், பழனியில் நடைபெறும் பங்குனி உத்தரம் திருவிழாவும், தேரோட்டமும், சிறப்பு வாய்ந்த திருவிழாவாகும்.

திண்டுக்கல் மாவட்டமும், அதைச்சுற்றியுள்ள மாவட்டங்களிலிருந்து, சைவ சமயத்தவர்கள், ஈரோடு மாவட்டம், கொடுமுடிக்குச் சென்று காவிரி நதியில் தீர்த்தம் (புனித நீர்) கொண்டுவந்து, பழனியில் போகரால் நிறுவப்பட்ட நவபாசாண முருகனுக்கு செலுத்துவார்கள். பங்குனியில் வெயில் கடுமையாக இருக்கும், நவபாசாணத்தால் ஆன முருகன் சிலை வெப்பத்தால் சிதைந்து போகாமல் இருக்க மூலிகைகள் கலந்த காவிரி நதியின் நீரால் குளிர்விப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட திருவிழா பங்குனி உத்தரம் திருவிழா.


www.aanmeegamalar.com




# ஹோலி பண்டிகை

ஹோலி அல்லது ரங்கபஞ்சமி என்று அழைக்கப்படும் பண்டிகை இந்து மதத்தின் பிரபலமான இளவேனிற்காலப் பண்டிகையாகும். மக்கள், ஒருவர் மீதொருவர் வண்ணப் பொடிகளையோ அல்லது வண்ணம் கலந்த நீரையோ வீசிக் கொண்டு கொண்டாடுகின்றனர். அந்த நாளுக்கு முன்னதாக பெரிய நெருப்புகளை மூட்டுவார்கள். இது ஹோலிகா தகனம் (ஹோலிகாவை எரித்தல்) அல்லது சோட்டி ஹோலி (சிறிய ஹோலி) எனவும் அழைக்கப்படும். இரண்யகசிபுவின் சகோதரி அரக்கி ஹோலிகா இளம் பிரஹலாதனை நெருப்பில் போட முயன்ற போது அதிலிருந்து வியக்கத்தக்க வகையில் அவர் தப்பித்ததன் நினைவாக நெருப்புகள் மூட்டப்படுகின்றன. ஹோலிகா எரிந்தாள்,

ஆனால் கடவுள் விஷ்ணுவின் மீது விடாப் பிடியான பக்தி கொண்ட பிரஹலாதன், தனது அசைக்க முடியாத தெய்வபக்தியின் காரணமாக எவ்வித காயமும் இன்றி உயிர் பிழைத்தான். ஹோலிகா தகனம், ஆந்திர பிரதேசத்தில் காம தகனம் அல்லது காமன் எரிப்பு எனக் குறிப் பிடப்படுகின்றது. ஹோலிப் பண்டிகை குளிர் காலத்தின் இறுதியில் பங்குனி (பிப்ரவரி/மார்ச்) (பங்குனிப் பௌர்ணமி) மாதத்தின் கடைசி முழு நிலவு நாளில் கொண்டாடப்படுகின்றது. இது பொதுவாக பிப்ரவரி அல்லது மார்ச் மாதத்தின் இறுதியில் வரும்.

இந்த வருடம் மார்ச் 28ஆம் தேதி (பங்குனி 15) ஹோலி வருகின்றது.

## பிரார்த்தனையின் படிப்படியான நிலைகள்

ஆரம்பத்தில் பிரார்த்தனை பக்திபூர்வமாக இல்லாமல் வெறும் வார்த்தைகளாக சொல்லப் படுகிறது. பிறகு பிரார்த்தனை தரத்தில் உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதனால் பிரார்த்தனையின் நிலைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### அ. முதல் நிலை

இந்த நிலையில் பிரார்த்தனை செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும்.மேலும் நமது பிரார்த் தனையில் நோக்கமும் குறிப்பிட்ட வார்த்தைகளும் இருக்கும். மேலும் இந்த நிலையில் நான் பிரார்த்தனை செய்கிறேன் என்ற உணர்வு மிகுந் திருக்கும்.

### ஆ. இரண்டாவது நிலை

நாம் இவ்வாறு பிரார்த்தனை செய்யும் பழக் கம் நன்கு கைவரப்பட்டு நேரப்படி தவறாமல் பிரார்த்தனை செய்தால் நமக்கு ஒருபிடிப்பும், நம்பிக்கையும், மன உறுதியும் ஏற்படும். அதனால் முன்பு போல் பிரார்த்தனை ஒரு குறிப்பிட்ட, திட்டவட்டமான வார்த்தைகளாக இல்லாமல், உண் மையுடனும், உணர்வு பூர்வமாகவும் இருக்கும். நாம் இறைவனுடனே, குருவுடனே வாதிடுவது போன்ற பாவனையில் பிரார்த்தனை அமைந்திருக்கும்.

### இ. மூன்றாவது நிலை

மேலும் இந்த நிலையில் பிரார்த்தனைக்காக வார்த்தைகளைத் தேட வேண்டிய அவசியமில்லாமல் அவை தாமாகவே வந்து விழும்.

### ஈ.நான்காவது நிலை

காலப்போக்கில் நாம ஜபம் இயல்பாக பிரார்த் தனையுடன் இணைந்து விடுகிறது. குருவையோ அல்லது இறைவனையோ பிரார்த்தனை செய்வதற்கு வார்த்தைகளும் மனதிலிருந்து தோன்ற ஆரம்பித்துவிடுகின்றன. இறைவன் நமக் குள்ளேயே எப்படி பிரார்த்தனை செய்ய வேண்டும் என்பதற்கும் வழிகாட்டுகிறார்.

### உ. ஐந்தாவது நிலை

இந்த நிலையில் பிரார்த்தனை வார்த்தைகளால் அமையாமல், நன்றி உணர்வு மிகுந்து அமையும். மேலும் பிரார்த்தனை, நன்றி தெரிவிப்பது ஆகிய எல்லாம் தனித்தனி அல்ல ஒன்று தான் என்ற ஆன்மீக அனுபவம் ஏற்படுகிறது.

### ஊ. ஆறாம் நிலை

நமது பிரார்த்தனையின் தன்மை உயர உயர நம்மால் நன்றியோடு இணைந்த சரணாகதி யினால் ஏற்படும் ஆன்மீக உணர்ச்சியை அதி கரிக்கச் செய்ய இயலும். “இறைவா நீ தான் எல்லாவற்றையும் நிகழ்த்துகிறீர்; எனவே எல்லாம் தங்கள் விருப்பப்படியே நடக்கட்டும்", என்று பிரார்த்தனை செய்ய இயலும். இவ்வாறு நம் பிரார்த்தனையின் தன்மை உயர உயர “நமது என்று ஒன்றும் இல்லை. இவ்வுலகில் உயிருள்ள உயிரில்லாத எல்லாப் பொருள்களும் கடவுளின் கட்டுப்பாட்டில் உள்ளது “ என உணர்வோம்; இயல்பாகவே நமது நன்றியுணர்வும், சரணாகதி பாவமும் அதிகரிக்கும். அப்பொழுது தான் ஒரு ஜீவன் இறைவனின் புனிதபாதங்களைச் சென்று அடைகிறது.

### எ. ஏழாம் நிலை

நான் பிரார்த்தனை செய்கிறேன் என்பதை மறந்து விடுவது பிரார்த்தனையின் உச்ச கட்ட நிலை. ஏனென்றால் பிரார்த்தனையை செய்பவன், செய்விப்பவன் மற்றும் பிரார்த்தனை என்ற மூன்றும் ஒருங்கிணைந்து விடுகிறது.

மேலும் விவரங்கலுக்கு
www.hindujagruti.org
தொடர்பு: 09380949626

# ஆன்மீக வழியில் அமைதி

மனிதன் ஒரு பொருளை வெறுத்தபின்பு மீண்டும் அந்தப் பொருளை நாடுவது விரும்புவது அவனது அமைதியை அழிப்பதற்குச் சமம். இதனை அவன் ஆன்மீக அறிவு உணர்த்தினாலும் அவனது மனம் உணர்வதில்லை. அவ்வாறு உணர்ந்தாலும் அதனை ஏற்பதில்லை. நம்மை ஒருவர் வெறுத்து ஒதுக்கியபின்பு அவர்களை விட்டு நாமும் விலகி இருக்க வேண்டும் என்ற மனப்பக்குவம் வயதான முதியோர்களுக்கு இருப்பதில்லை. தான் பெற்ற மக்களே வெறுத்துத்தான் முதியோர் இல்லத்தில் தங்களை சேர்த்து இருக்கிறார்கள். அதனை அவர்கள் நன்கு புரிந்திருந்தாலும், குறையென்று தெரிந்திருந்தாலும், அவர்கள் அந்தக் குறையைப் பொருட்படுத்துவோ தங்கள் பிடிவாதத்தை மாற்றிக்கொள்வதோ இல்லை.

இதற்கு அவர்களது மனப்பக்குவமின்மையே ஒரு காரணம். மற்றொரு காரணம் அந்த முதிய வர்கள் பந்தபாசத்தினால் வரக்கூடிய மகிழ்ச்சியை எளிதில் அப்போது இழப்பதற்கு அவர்கள் விரும்புவதில்லை. அதனால் அவர்கள் தங்களது வாழ்க்கையில் முதுமைக்காலத்தில் ஏற்படும் துன்பங்களை வெளியே சொல்லமுடியாமல் உடலாலும் உள்ளத்தாலும் அமைதியின்றி தவிக்கிறார்கள். அவர்கள் பந்தபாசத்திலிருந்து விடுபடமுடியாமல் அமைதியின்றி தவிக்கிறார்கள். முதியவர்கள் மனபக்குவம் பெற்று மனஅமைதி பெறுவதற்கு ஆன்மிகம் வழி காட்டுகிறது.

இதற்கு ஒரு கதை உண்டு. ஒருதாய்க்கு குழந்தை பிறக்கிறது. தாய் கண் விழித்து பார்க்கும்போது உயிரை வாங்கும் எமதர்மன் பாசக்கயிற்றுடன் நிற்பது அவள் கண்ணுக்குத் தெரிகிறது. எமதர்மன் அவளிடம் 'உன் குழந் தையின் உயிரைக் கவருதற்காக வந்திருக்கிறேன்" என்று கூறுகிறான். அந்த தாய் "எமதர்மரே என்னோட குழந்தையின் மழலை மொழி நான் கேட்டு மகிழ்ந்த பிறகு என்னோட குழந்தையின் உயிரைக் கவர்ந்து செல்" என்று வணங்கிக் கேட்டுக் கொள்கிறாள். எமதர்மன் அந்தத்தாயின் மீது இரக்கப்பட்டு குழந்தையின் உயிரைக் கவராமல் சென்று விடுகிறான்.




அந்த தாய் குழந்தையை தன்னோடமடியில் வைத்து மழலை மொழி கேட்டு மகிழ்ந்து கொண்டிருக்கும்போது, எமதர்மன் மீண்டும் பாசக்கயிற்றுடன் அந்த தாயின் முன் நின்று "தாயே நீ உன் குழந்தையின் மழலை மொழி கேட்டு மகிழ்ந்து விட்டாயே நீ முன்பு என்னிடம் வாக்களித்தபடி குழந்தையின் உயிரைக் கவரு வதற்கு வந்திருக்கிறேன்'' என்றான்.

அதனைக் கேட்டவுடன் அந்தத் தாய் மாலை மாலையாகக் கண்ணீர் வடித்து "எமதர்மரே என்னோட குழந்தையின் பிஞ்சுக்கால்களின் அன்னநடையை நான் பார்த்து மகிழ்வதற்கு வேண்டாமா? குழந்தையின் பிஞ்சுக்கால்கள் நடக்கும் அழகை நான் பார்த்து மகிழ்ந்த பிறகு என்னோட குழந்தையின் உயிரைக் கவர்ந்து செல்'' என்று வேண்டினாள். எமதர்மன் அந்த தாயின்மீது இரக்கப்பட்டு குழந்தையின் உயிரைக் கவராமல் சென்று விடுகிறான்.

அந்தத் தாய் தன்னோட குழந்தை அன்னநடை நடந்து வரும் அழகை மகிழ்ச்சியுடன்

பார்த்துக் கொண்டு இருக்கும்போது எமதர்மன் பாசக்கயிற்றுடன் அந்த தாயின் முன் நின்று “தாயே நீ உன் குழந்தையின் அன்னநடை நடந்து வரும் அழகை பார்த்து நீ மகிழ்ந்து விட்டாயே. நீ முன்பு என்னிடம் கூறியபடி உன் விருப்பம்போல் குழந்தையின் உயிரைக் கவரு வதற்கு வந்திருக்கிறேன்’’ என்றான். அந்த தாய் கண்ணீர்விட்டு கதறி அழுதுகொண்டே “எம தர்மரே என் குழந்தை குருகுலம் சென்று கல்வி பயிலும் அழகை பார்த்து நான் மகிழ வேண்டாமா? கல்வி பயிலும் அழகை நான் பார்த்து கேட்டு மகிழ வேண்டும்.

அவ்வாறு நான் மகிழ்ந்த பிறகு குழந்தையின் உயிரைக் கவர்ந்து செல்’’ என்று எமதர்மன் காலில் விழுந்து மன்றாடினாள். எமதர்மன் அந்த தாயின்மீது இரக்கப்பட்டு இந்தமுறையும் குழந்தையின் உயிரைக் கவராமல் சென்று விடுகிறான். ஒவ் வொரு முறையும் எமதர்மன் குழந்தையின் உயிரைக் கவருவதற்கு வரும்போதெல்லாம் அந்தத் தாய் தன்னோட குழந்தையின் மீதுள்ள பாசத்தினால் எமதர்மனிடம் வேண்டி குழந்தையை காப்பாற்றிக் கொண்டே வந்தாள். அவள் குழந்தை சிறுவனாக வாலிபனாக வளர்ந்து அவளுக்கு முன்னால் திருமணக்கோலத்தில் நின்று கொண்டு இருந்தான்.

தன்னோட மகனின் திருமணக்கோலத்தில் நிற்கும் அழகை அந்த தாய் மகிழ்ச்சியுடன் பார்த்துக் கொண்டு இருந்தாள். அப்போது எமதர்மன் பாசக்கயிற்றுடன் அந்த தாயின் முன் வந்து நின்று “தாயே நீ விரும்பியபடியே உன்னோட மகனின் திருமணக்கோலம் நிற்கும் அழகை பார்த்து நீ மகிழ்ந்து விட்டாயே. நீ எனக்கு வாக்களித்தபடி உன் மகனின் உயிரைக் கவருவதற்கு வந்திருக்கிறேன்’’ என்றான்.

அந்த தாய் “எமதர்மரே என்னோட மகனின் பேரக்குழந்தையுடன் கொஞ்சி மகிழ வேண்டாமா“ என்று கூறிக்கொண்டு இருக்கும்போது, எமதர்மன் பதில் ஏதும் கூறாமல் அந்த தாயினுடைய மகன் உயிரைக் கவர்ந்து சென்று விடுகிறான்.

இந்நிகழ்வுக்கு பிறகு எமதர்மன் யார் கண்ணுக்கும் தெரிவதில்லை என்று கூறுவார்கள். தாய் மகன் என்ற பாசம்தான் எமதர்மனிடம் அவ்வாறு அந்த தாய் நடந்துகொள்ளும்படி செய்தது என்பதை இந்தக் கதையின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

அந்த தாயைப்போன்றுதான் ஒவ்வொரு மனிதனும் பந்தபாசத்தில் இருந்து விடுபடுவதற்கு விரும்புவதில்லை. அதனால் அவன் மன அமைதியை இழக்கிறான். ஆன்மிகம் மனிதனுக்கு பந்தபாசம் கூடாது என்று கூறவில்லை. மனிதர்களுக்கு பந்தபாசம் இருக்கலாம். அது

• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

தாமரையிலைத் தண்ணீர்போல் இருக்க வேண்டும் என்று ஆன்மிகம் கூறுகிறது.

உலகில் மனபக்குவமின்மையே சிலரது அமைதியற்ற வாழ்க்கைக்கு காரணமாகும். சிலருக்கு இந்தப் பொருளை வாங்குவதால் அல்லது அடைவதால் நமக்கு நல்லதல்ல என்று தெரிந்திருந்தாலும், அந்தப்பொருளை வெறுப்பதில்லை. ஒரு பொருளை அடைவதன் மூலம் வரும் இன்பத்தில் துன்பம் கலந்து இருக்கிறது என்று குறைகள் அறிந்திருந்தாலும், அந்த இன்பத்தை அடையவே மனிதன் விரும்புகிறான். அந்தப் பொருளை அடைவதில் உள்ள குறைகள் துன்பம் கலந்த இன்பத்தில், பாதுகாப்பு இல்லாத இன்பத்தில் மனிதர்கள் சலிப்படையும்வரையில், அதில் அவர்கள் மனபக்குவம் அடையும் வரையில் உலகத்தில் உள்ள இன்பத்தினை அனுபவவித்துக் கொள்வதற்கு வேதம் அனுமதி அளிக்கிறது.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

நம்மில் பலரிடம் மோட்சம் வேண்டுமா என்று கேட்டால், இப்போது எனக்கு மோட்சம் வேண்டாம் என்றுதான் கூறுவார்கள். அவர்கள் எண்ணமெல்லாம் பலவிதமான குற்றங்குறைகள் உள்ள இன்பமாக இருந்தாலும், அநித்தியமான இன்பமாக இருந்தாலும் பரவாயில்லை. அந்த இன்பத்தை தங்கள் மரணம் வரையில் மகிழ்ச்சியாக வாழ்ந்து அனுபவிக்க வேண்டும் என்றுதான் விரும்புகிறார்கள்.

இதுதான் இன்றைய உலகில் மனிதர்களின் இயல்பாக இருக்கிறது. இந்த இயல்பினை மாற்று வதற்கு மனஅமைதி பெறுவதற்கும் ஆன்மிகம் வழி காட்டுகிறது.

நாம் மோட்சம் வீடுபேற்றினை அடைய வேண்டுமெனில் தானதர்மங்கள் செய்து புண்ணிய பலன்களை சேர்க்க வேண்டும். அவ்வாறு புண்ணியத்தை சேர்க்கும்போது ஒரு பொருளை அடையும்போது அதன் மூலம் கிடைக்கும் இன்பம் ஆனந்தம் நிரந்தரமாக இருக்க வேண்டும். அந்த இன்பம் குறைவில்லாத நிறைவான இன்பமாக மகிழ்ச்சியாக இருக்கவேண்டும். அந்த இன்பம் மகிழ்ச்சி சுதந்திரமாக அதற்கு மனம் அடிமையாகாமல் இருக்க வேண்டும். ஒரு பொருளின் மூலம் வரும் இன்பத்தை மனிதன் தொடர்ந்து அடையவேண்டுமெனில் தர்ம நியதிப்படி எந்தவிதமான பலனையும் எதிர்பாராமல் புண்ணியபலன்களை அவன் சேர்க்க வேண்டும். புண்ணியபலன்கள் வரவேண்டுமென்றால் உனது உலகக்கடமைகளை சாஸ்திரங்களில் தெரிவித்துள்ளபடி தர்ம நியதிப்படி ஆன்மீக வழியில் செயல்களில் ஈடுபடவேண்டும். அதற்கு ஞானத்துடன் கூடிய அறிவு தேவை.

எப்போதும் தர்ம சிந்தனையில் ஈடுபட்டு தியானத்தில் ஈடுபட்டால் தர்ம ஞானம் கிடைக்கும். அதன் மூலம் மனஅமைதி கிடைக்கும். எது தர்மச் செயல் எது பாவச்செயல் என்பதை அறிந்து செயல்படுவதற்கு அதற்கு அதர்ம ஞானம் வேண்டும். எனவே மனிதன் மோட்சத்தை அடைவதற்கு தர்மஞானம் அதர்மஞானம் இரண்டும் வேண்டும். மனிதனை விட்டு பாவச்செயல்கள் அகல்வதற்கு அதர்மஞானம்வேண்டும் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

பாவச்செயல்கள் புண்ணியச்செயல்கள் எவை என்பதை அறிந்து, அதன்படி வாழ்ந்து ஆத்ம இன்பத்தை அடைந்து நித்தியமான பரமாத்மாவை அடைய முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் உனக்கு ஆன்மீக வழியில் அமைதியான நித்தியமான இன்பம், நாம் தேடிய மனஅமைதி கிடைக்கும். ஞானத்தின் மூலம் ஆன்மீக அறிவு கொண்டு அதனை அறிந்து கொள்ளமுடியும். இதற்கு ஆன்மீக வழியில் மனப்பயிற்சி மிகவும் தேவை.

ஆன்மீக அன்பர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும். பய னுள்ள ஆன்மீக நூல்களை, தத்துவ நூல்களை தினமும் பயில வேண்டும். கோவில்களில் நடத்தப்படும் ஆன்மீக சொற்பொழிவுகளை பொறுமையாக முழுமன ஈடுபாட்டுடன் கேட்க வேண்டும். நம் மனதில் குழப்பங்கள் துன்பங்கள் மனஅழுத்தம் போன்றவை ஏற்படும்போது இனிய பக்திப்பாடல்கள், ஆன்மீக சொற்பொழிவுகள் ஆகியவற்றினை ஆடியோ, வீடியோக்கள் மூலம் கேட்டு மனதினை மென்மையாக்கி, நாம் வாழ்வில் ஓரளவுக்கு மன அமைதி பெறமுடியும்.

(அமைதி தொடரும்)

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd) கைபேசி: 9894043308

**Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : C.N.Raja, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

aanmeegamalar mail book (BI MONTHLY) R.Dis No:1068/2020

# நம்ம ஊரு கோவில்

உங்கள் ஊரில் உள்ள கோவில்களைப்பற்றிய தகவல்களையும், சிறப்புகளையும் e-mail, WhatsApp வாயிலாக டைப் செய்து அனுப்புங்கள்.

**நமது இதழ் மூலம் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்....**

பழமையான கோவில்கள், கிராமத்து கோவில் பற்றிய விவரங்களையும், வழிபாட்டு முறைகளையும் மற்றவர்கள் அறிந்து கொள்ள ஆன்மிக அன்பர்கள் வரவேற்கப்படுகின்றனர்.



தொடர்பு கொள்ள வேண்டிய எண்:

**9444228203**

aanmeegamalar